வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.03.2023 திங்கட்கிழமை | இதழ் : 108 | பக்கங்கள் : 16

## தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்த

# வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம் முழுமையாக அழிப்பு!



● ஆதிலிங்கேஸ்வரர் பெயர்த்து வீசப்பட்டது

● விநாயகர், அம்மன் சிலைகள் மாயம்!

வவுனியா மார்ச் 27

தொல்பொருள் திணைக்களத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழுள்ள வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறிமலையில் அமைந்திருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது.

அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதிசிவலிங்கம் முழுமையாகப் பெயர்க்கப்பட்டு உடைத்து வீசப்பட்டுள்ளது. இதேபோன்று, அங்கிருந்த விநாயகர், அம்மன் சிலைகள் பெயர்த்து அகற்றப்பட்டுள்ளன. அத்துடன், அங்கிருந்த சூலங்களும் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

15

## சைவ மக்களின் தொன்மைகளை அழிப்பதை அரசு நிறுத்தவேண்டும்!

### இந்து மாமன்றம் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சைவ மக்களின் தொன்மைகளை அழிக்கும் செயல் தொடர்கிறது. திட்டமிட்டு நடைபெறும் இவ்வாறான செயல்களை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

நெடுங்கேணி - ஆதிலிங்கேஸ்வரர் சிவன் ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து அந்த அமைப்பின் உபதலைவர் ஆறு. திருமுருகன் நேற்று விடுத்த கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது.

அதில், "சைவ மக்களின் தொன்மைகளை அழிக்கும் செயல்பாடு தொடர்கிறது. இது திட்டமிட்டு நடைபெறுகிறது. அரசாங்கம் இத்தகைய செயல்களை நிறுத்த வேண்டும். தொல் லியல் திணைக களம் ஆதி சைவக் கோவில்களை சைவ மக்கள் பராமரிப்பதற்கு தொடர்ந்து இடையூறு செய்வது வேதனைக்குரியது. விக்கிரகங்களை உடைத்தமை

15

## குற்றங்களை தடுக்க விசேட திட்டம்!

யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கு விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படு கிறது - என்று அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

வறிய மக்களுக்கான இலவச

15

## சிவனாலயம் அழிப்பு; யாழில் ஆர்ப்பாட்டம்!



யாழ்ப்பாணம், மார்ச் 27

நெடுங்கேணி - வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வர் ஆலயம் முழுமையாக அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சைவ அமைப்புகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில்

11

## அரச ஊழியருக்கான சம்பளம்; அரைவாசி படை தரப்பினருக்கு

### இரு பல்கலைக்கழகங்களின் ஆய்வில் தகவல்!

கொழும்பு, மார்ச் 27

அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக ஒதுக்கப்படும் மொத்தத் தொகையில் கிட்டத்தட்ட அரைப் பங்கு (48.8 சதவீதம்) இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸாருக்கே செலவிடப்படுகிறது என்று பேராதனை மற்றும் ருஹுணு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மூன்று ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில் தெரியவருகின்றது.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக ஆண்டுக்கு 69 ஆயிரத்து 491 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

இதில், படைத் தரப்புகளுக்கு

15

## தமிழர் பகுதி பௌத்த மயமாக்கல் அரசாங்கத்தின் திட்டம் இல்லை!

### குற்றச்சாட்டுகளை மறுக்கிறது அரசு

கொழும்பு, மார்ச் 27

"தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த மயமாக்கலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் திட்டம் இல்லை. இது தொடர்பில் அரசாங்கம் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கின்றேன்." - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படைத்தரப்பினராலும் தொல்பொருள் திணைக்களத்தினராலும் முன்னெடுக்கப்படும் பௌத்த

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# உருத்திரசேனையின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் உருவ வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

உருத்திர சேனையின் "திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழா" நிகழ்வு யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மறவன்புலவு க. சச்சிதானந்தன் ( தலைவர் - சிவசேனை ), சிறப்பு விருந்தினர்களாக எச். ஈ. ராகேஷ் நடராஜ் ( இந்திய துணை தூதுவர் - யாழ்ப்பாணம் ) ந.விஜயசுந்தரம் ( பிரதம ஆசிரியர் - வலம்புரி), கௌரவ விருந்தினர்களாக கலாநிதி ஆறு திருமுருகன் (தலைவர் - துர்க்காதேவி தேவஸ்தானம் , தெல்லிப்பழை ) பேராசிரியர் எஸ். சிறீ சற்குணராஜா ( துணைவேந்தர் -யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் பொது மக்கள், சைவ சமய ஆதரவாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# இப்படியும் நடக்கிறது...!

தமிழினம் இப்போது பலமில்லாத நிலையில் இருக்கின்றது என்று ஈழநாடு எழுதுவதை பலரும் விமர்சித்து வருவதைக் காணமுடிகின்றது.

தமிழர்களின் பலத்தை ஈழநாடு அறியவில்லை என்றும் சிலர் கூறியும் எழுதியும் வருகின்றனர்.

இந்து சமுத்திரத்தில் முக்கிய மூலோபாய அமைவிடத்தில் இருக்கும் இலங்கைத் தீவுக்கு சொந்தமான கடலில் மூன்றில் இரண்டு பங்கு, தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கிலேயே இருக்கிறது என்பதால் அது எமது பலம் என்றும் ஒருவர் எமக்கு எழுதியிருந்தார்.

இப்படித்தான் நாம் நமது பலத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தை பற்றி உலகில் யாருடன் கதைத்தாலும் ஏதோ அது கல்வியின் பிறப்பிடம் என்பதுபோல பேசுவார்கள். யாழ்ப்பாண மக்கள் கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவம் அதற்கு காரணமாக இருக்கலாம்.

இளைஞர்கள் தமது கைகளில் ஆயுதங்களை ஏந்துவதற்கு காரணமாக இருந்ததும் இந்த கல்விதான். கல்வியில் தரப்படுத்தல் முறையை சிறீமாவோ அரசாங்கம் அறிமுகம் செய்ததுதான் தமிழ் மாணவர் பேரவை தோன்றுவதற்கும் காரணமானது.

ஆனால், முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்கானவர்கள் குற்றுயிராகக் கிடந்தபோது அவர்களுக்குச் சேவையை வழங்கிய மருத்துவர்களில் பலர், இதே தரப்படுத்தலால் நன்மையடைந்த மாணவர்களில் இருந்து மருத்துவர்கள் ஆனவர்களே என்பது வேறு விடயம்.

ஒரு தடவை நான் லண்டனில் நண்பர் ஒருவரின் வீட்டுக்கு சென்றிருந்தேன்.

அப்போது, அவரின் மகள் வீட்டில் இருக்கவில்லை. எங்கே என்று கேட்டபோது நண்பர் சொன்னார், 'ரியூசனுக்குப் போயிருக்கிறார்' என்று.

அருகில் இருந்த அவர் மனைவி சொன்னார், 'அவர் ரியூசன் கிளாசில் கொடுத்த ஹோம் வேர்க் செய்ய மற்றுமொரு ரியூசனுக்குச் சென்றிருக்கிறார்' என்று.

அதாவது பாடசாலையில் கொடுத்த ஹோம் வேர்க் அல்ல, ஒரு ரியூசன் கிளாசில் கொடுத்த ஹோம் வேர்க்கைச் செய்ய இன்னுமொரு ரியூசனுக்கு போயிருக்கிறார் அவர்.

இப்படிச் சொல்வதன் மூலம் தமக்கு கல்வியின் மீதிருக்கும் அதீத அக்கறையை பறைசாற்றினார் நண்பரின் மனைவி.

இன்றும் தங்களை கல்வியில் சிறந்த சமூகம் என்றும் தங்களை விட்டால் கல்வியில் சிறந்தவர்களே இல்லை எனவும் பெருமை பேசுகின்ற பலரை இப்போதும் யாழ்ப்பாணத்தில் காணலாம்.

அத்தகைய ஒரு கல்விப் பெருமை பேசும் எமது சமூகமானது இப்போது, தமது கல்வியை வளர்த்தெடுக்கவும் தமக்குப் பல்வேறு விடயங்களில் வகுப்பெடுக்கவும் கொழும்பில் இருந்து சிலர் வரிசைகட்டி வருவதற்கு அனுமதித்துக் கொண்டிருக்கின்றது.

முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அவர் ஆசிரியராக எதாவது ஒரு பாடசாலையில் கல்வி கற்பித்தாரா என்று அந்தப் பத்தியில் கேட்டிருந்தேன்.

தொழில்சங்கம் ஒன்றில் தலைவராகவோ, செயலாளராகவோ இருக்கின்ற ஒருவர் அந்த தொழில்சங்கப் பணிகளுக்காகத் தனது பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுவார். ஆனால், பணிக்குச் செல்லவில்லை என்றாலும், அவருக்கு அவரின் பணிக்குரிய சம்பளம் மட்டும் தொடர்ந்தும் கிடைக்கும்.

அவ்வாறு தொழில்சங்கத் தலைவராக இருக்கும் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் இதுவரை ஆசிரியராக ஒராண்டாவது பணியாற்றினாரோ தெரியவில்லை.

ஒரு பல்கலைக்கழகத்தில் மாணவனாகிவிட்டால் நான்கு ஆண்டுகளில் அங்கிருந்து பட்டத்தை பெற்றுக்கொண்டு வெளியேறிவிடலாம். அதுதான் சாதாரண நடைமுறையும்கூட. ஆனால், ஒருவர் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பல்கலைக்கழகத்திலேயே படித்துக்கொண்டிருக்கிறார்.

ஒரு மாணவன் இத்தனை ஆண்டுகளுக்கிடையில் இறுதியாண்டு பரீட்சையை முடித்துவிடவேண்டும் என்ற சட்டம் எதுவும் எமது நாட்டில் இல்லாமையால் இறுதியாண்டுப் பரீட்சையை எழுதுவதை நான்கு ஆண்டுகளாகத் தவிர்த்து வருகிறார் ஒரு மாணவன். அதற்கு காரணம் என்னவென்று ஆராய்ந்தால், அவ்வாறு 'மாணவனாக' இருப்பதால் கிடைத்திருக்கும் 'மாணவர் சங்க தலைவர்' என்ற பதவியில் தொடரவேண்டும் என்பதற்காகவே அவர் அவ்வாறு செய்கிறார் என்பது தெரியவருகின்றது. இப்படியான ஒருவரை 'மாணவன்' என்ற வகைக்குள் அடக்கலாமா என்பதே ஒரு பெரும் கேள்விதான். அவர் வேறு யாருமல்ல, அனைத்து பல்கலைக்கழக மாணவர் சங்க தலைவர் வசந்த முதலிகேதான் அவர்.

ஆக, ஆசிரியராகவே பணியாற்றாத 'ஆசிரியர்' ஒருவரும், பரீட்சையே எழுதாத 'பல்கலைக்கழக மாணவர்' ஒருவரும்தான் யாழ்ப்பாணத்தில் கல்விப் புரட்சி செய்ய வந்திருக்கிறார்கள். அவர்கள் இங்கு வர தொடர்ந்து அனுமதித்து, அவர்களைக் கொண்டு திரியும் யாழ்ப்பாணத்து 'அறிவுஜீவிகளை' எப்படி அழைப்பது என்பதுதான் தெரியவில்லை.!

- ஊர்க்குருவி

# யாழ்ப்பாணம் இந்துவில் சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். இந்து திரிசாரணர் குழுவின் 6 சாரணர்களுக்கான சத்தியப் பிரமாண நிகழ்வுடன் கூடிய சின்னம் தரித்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.

திரிசாரணர் குழுவானது பாடசாலை கல்வியை பூர்த்தி செய்தவர்களுக்கான சாரணர் சேவையை 26 வயது வரை தொடர்வதற்கான கட்டமைப்பாகும்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களான வைத்தீஸ்வரன், கோகுலரமணன், சிவசங்கர், நிமல், டினுசாந்தன், கோபி ராம் ஆகிய சாரணர்கள் திரிசாரணர்களுக்கான உறுதியேற்பு எடுத்துக்கொண்டனர்.

யாழ். மாவட்ட முன்னைநாள் சாரண ஆணையாளர் செ.தேவரஞ்சன், யாழ். மாவட்ட சாரண உதவி மாவட்ட ஆணையாளர்களான கோ.சத்தியன், துற்ஜெயந்தன், சாரணர் தலைமை செயலக உதவி ஆணையாளர் அமல்ராஜ், யாழ் இந்து கல்லூரி சாரண ஆசிரியர் நிதர்சன், யாழ். இந்து திரிசாரணர் ஆசிரியர் சுஜீவன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# முப்பெரும் கூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து நடத்தும் முப்பெரும்கூடல் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில், புத்தகக் கண்காட்சியும் - விற்பனையும் நாவலர் வரலாற்று சித்திரக் காட்சி, விழிப்புணர்வு நாடக ஆற்றுகை போன்றவை முன்னெடுக்கப்படவுள்ளன.

நாவலர் கலாசார மண்டபத்தில் நாளையும், நாளை மறுதினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த நிகழ்வு இடம்பெறும். (ஐ)

# பந்துலவுக்கு 'ஹூ' ஒலி எழுப்பியவர் கைதானார்!

கொழும்பு, மார்ச் 27

ஹோமாகமை - பிட்டிபன சந்திக்கு அருகில் பௌத்த விகாரை அமைக்க அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்ட ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தனவை நோக்கி "ஹூ" சப்தம் எழுப்பிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் பிட்டிபன வடக்கைச் சேர்ந்த 43 வயதுடைய வர்த்தகரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அமைச்சர் பந்துல குணவர்த்தனவை நோக்கி "ஹூ" குரல் எழுப்பியவாறு லொறியில் கூட்டத்தைக் கடந்து சென்றுள்ளார்.

இதையடுத்து பொலிஸார் விரைந்து செயல்பட்டு, சந்தேக நபரை பின் தொடர்ந்து கைது செய்தனர்.

சமய நிகழ்வுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் நேற்று அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். (ஐ)

# காண்பியகலை கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 27

காண்பியக்கலை கண்காட்சி சங்கரத்தை - துணவி சந்திக்கு அண்மையில் நாற்சார் வீட்டில் நேற்று ஆரம்பமானது.

இருபாலையைச் சேர்ந்த சமகால காண்பிய கலைஞரான தவராசா தஜேந்திரன் என்பவரின் காண்பியக்கலை ஓவியங்களே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியில் கவிதை, ஓவியம், தியானம் ஆகியவற்றை ஒன்றிணைத்த பரிசோதனைகள் மூலம் பெறப்பட்ட படைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நிலம்சார் மூலப் பொருட்களை பயன்படுத்தி, குறிப்பாக சாம்பல், தூசி துணிக்கைகள் ஆகிய இயற்கை மூலப் பொருட்களைப் பயன்படுத்தி அவருடைய படைப்புகளை உருவாக்கி காட்சிப்படுத்தியுள்ளார்.

நேற்று ஆரம்பமான இந்தக் கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. மாலை 6 மணி வரை இந்தக் கண்காட்சியை பார்வையிட முடியும். (ஐ)

# தப்பிக்க ஆற்றில் குதித்த கைதி சடலமாக மீட்பு!

கண்டி, மார்ச் 27

கண்டி - பல்லேகலை திறந்த வெளி சிறைச்சாலை முகாமில் இருந்து மகாவலி ஆற்றில் குதித்து தப்பிச் செல்ல முயன்ற கைதி நீரில் மூழ்கி உயிரிழந்தார். அவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பல்லேகலை பொலிஸார் மற்றும் கடற்படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் பின்னர் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் மூழ்கிய கைதி கொழும்பு 15ஐச் சேர்ந்த 34 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைக்கைதி காவலில் இருந்து தப்பி மகாவலி ஆற்றில் குதித்ததால் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Eelanadu
27.03.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சர்வதேசம் ரணில் பக்கமா?

மக்களும் சர்வதேசமும் எனது பக்கம் - எனவே, தொழில்சங்க போராட்டங்களால் அரசாங்கத்தை வீழ்த்த முடியாதென்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். தொழில் சங்கங்களும் எதிர் கட்சிகளும் போராட்டங்களை தீவிரப்படுத்தப் போவதாக எச்சரித்து வருகின்ற சூழலில்தான் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

நாடு பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் திவாலாகியபோதுதான் ஓர் ஆசனத்துடன் இருந்த ரணில் விக்கிரமசிங்க எவருமே எதிர்பாராத வகையில் ஜனாதிபதியானார். கிட்டத்தட்ட அரசியலில் காணாமல் போய் விட்டாரென்று எண்ணிக் கொண்டிருந்த சூழலில் நாட்டை வீழ்ச்சியிலிருந்து மீட்கக்கூடிய அவதாரமாக ரணில் காட்சியளித்தார். கோட்டாபய ராஜபக்ஷவால் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாதென்று கருதப்பட்ட சூழலில், அடுத்தது யாரென்னும் கேள்விக்கு அப்போது சில பதில்கள் முன்வைக்கப்பட்டன. அதில் முதன்மையான பெயர் சஜித் பிரேமதாஸ. ஆளும் தரப்பால் முடியாமல் போகும்போது எதிர்க்கட்சிதான் நாட்டை பொறுப்பெடுக்க வேண்டும். ஆனால், சஜித் பிரேதாஸவிடமிருந்து அந்த ஆளுமை வெளிப்படவில்லை. ஒருவேளை சஜித் உடனடியாக நாட்டைப் பொறுப்பெடுக்க முன்வந்திருந்தால் ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகள் தோல்வியடைந்திருக்கலாம். மற்றவர்கள் தயங்கிக் கொண்டிருந்தபோது ரணில் அந்த சந்தர்ப்பத்தை மிகவும் புத்திசாதுர்யமாகவும் தந்திரமாகவும் பயன்படுத்திக் கொண்டார்.

அரசியல் நெருக்கடிகளை கையாள்வதில்தான் ஒருவரின் தலைமைத்துவம் வெளிப்படும். ரணில் நீண்ட அரசியல் அனுபவத்தையும் புத்திக்கூர்மையையும் கொண்டிருந்தபோதும் ஜனவசியமுள்ள தலைவராக ஒருபோதுமே இருந்ததில்லை. ஜனவசியமின்மைதான் ரணிலால் ஜனாதிபதியாக முடியாமல் போனமைக்கான பிரதான காரணமாகும். ஆனால், தற்போது நாட்டின் நெருக்கடி நிலைமை ரணிலை ஓரளவு ஜனவசியமுள்ளவராக உயர்த்தியிருக்கின்றது. முழுமையாக இல்லாவிட்டாலும்கூட, இன்றைய சூழலில் ரணிலால்தான் சில விடயங்களை சாதிக்க முடியும், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்னும் பார்வையொன்று சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கின்றது. அதேவேளை சர்வதேச சமூகத்துக்கும் பரீட்சயமான, குறிப்பாக அமெரிக்க மற்றும் மேற்குலகத்தின் ஆதரவை பெற்றவாராக இருப்பதும் தனக்கு சாதகமான ஒன்றாக இருப்பதாகவே ரணில் கருதுகின்றார். ரணில் கூறுவதில் தவறில்லை. இன்றைய சூழலில் ஒப்பீட்டடிப்படையில் மேற்குலகத்துக்கு முன்னால் ஒரு தெரிவு இருக்குமென்றால், அது நிச்சயம் ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். ரணிலை தவிர்த்து பிறிதொருவரை நோக்குமளவுக்கு வேறு எவருமில்லை.

இந்தப் பின்புலத்தில்தான் ரணில் சர்வதேசம் தனது பக்கமாக இருப்பதாகக் கூறுகின்றார். இலங்கையை மாறிமாறி ஆட்சிசெய்த கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி கொள்கையளவில் மேற்கு சார்பான கட்சியாகவும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி நடுநிலைமை கொள்கையை கடைப்பிடித்த கட்சியாகவும் இருந்திருப்பதே வரலாறு. ஆனால், 2020 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்று தோல்வியை சந்தித்தபோது இலங்கைத் தீவின் தாராளவாத அரசியலில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

2005 ஜனாதிபதி தேர்தலில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்பதில் அமெரிக்கா கரிசனை காண்பித்திருந்தது. குறிப்பாக, அப்போதிருந்த அமெரிக்க உதவி இராஜாங்க செயலர் ரிச்சர்ட் ஆமிட்ரேஜ் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பித்திருந்தார். ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேர்தல் பகிஷ்கரிப்பு நகர்வால் ஆமிட்ரேஜின் நகர்வுகள் தோற்கடிக்கப்பட்டன. இதன் விளைவுகளை பின்னர் புலிகள் அனுபவித்தனர். 2006இல் ஐரோப்பிய ஒன்றியம், கனடா ஆகியவை விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடை செய்தன. யுத்தம் முடிவுற்று 13 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில்கூட விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை இப்போதும் தொடர்கின்றது.

யுத்தம் முடிவுற்று 6 வருடங்களின் பின்னர்தான் 2015இல், ரணில் விக்கிரமசிங்க, அதிகாரமுள்ள பிரதமராக வரமுடிந்தது. தற்போது, மக்கள் ஆதரவுடன் ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந்த நிலையில் ரணிலை விடுத்து மேற்கு உலகால் வேறு எவரை ஆதரிக்க முடியும்.

# 'யோகரை' ஈர்த்த 'ஈழநாடு' ஞான வைரவர்! இன்று மகா கும்பாபிஷேகம்



வண்ணார்பண்ணை, நல்லதண்ணீர்க் கிணற்றடி ஞானவைரவர் கோவில், யாழ்ப்பாணம் வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி கோவில் மேலை வீதிக்கு அணித்தாகவும், 'ஈழநாடு' அலுவலகத்தின் சூழலிலும் அமைந்தது.

மறவன்புலவு குமார சூரியர் வழித்தோன்றலான சிவகாமித் தாயாரவர்களால் சென்ற நூற்றாண்டு இறுதியில் எழுந்த இக் கோவிலில் உள்ள மூலவர் சூலம், ஆதியிலே ஒரு பெரும் மகிழ விருட்சத்தின்கீழ் உள்ள சிறிய செங்கல் மண்டபத்தில் வைத்துப் பூசிக்கப்பட்டது. மகிழ மரத்துக்கு அருகில், பெரிய வில்வமரமும், பன்னீர் மரங்களும் செழித்து வளர்ந்து, இவ்விடத்துக்கு ஒரு தெய்வீகச் சூழ்நிலையையும் புனிதத்தையும் உண்டாக்கின.

சிவகாமித் தாயார் சிறந்த சிவபக்தை. பல விரதங்களையும் அனுட்டித்துத் தவ வாழ்க்கை வாழ்ந்தவர். இவர் வாழ்ந்த இல்லம் (நாற்சாரம் வீடு) 'ஈழநாடு' காரியாலயத்தின் வடக்கெல்லையில் அமைந்த ஆதனமாகும். தினமும் காலைக்கடனை முடித்து, நீராடி, நார்ப்பட்டுடுத்து. தனது பூசை அறையில் உள்ள மாடங்களில் வைக்கப்பட்டிருந்த மூர்த்திகளுக்கு (சிவலிங்கம், சிவசக்தி, வேற் பெருமான்) அபிடேக ஆராதனைகள் செய்து நிவேதித்து, ஞான வைரவ சுவாமியைத் தரிசித்து, பின்புதான் உணவு உண்பார். அன்னாரின் இல்லத்தில் நடந்த சிவபூசைகளும், சிவதீட்சைகளும் அனந்தம். வேதாரணியக் குருக்கள்மார் பலரும் வந்து அங்கு வழிபட்டிருக்கிறார்கள். வேதாரண்யத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த சைவக்குருமார்கள், இவ்வம்மையாரின் இல்லத்தில் வாழ்ந்து, இச்சுற்று வட்டாரத்திலுள்ள பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் சிவதீட்சை அளித்தனர். போக்குவரத்து வசதியில்லாத அக்காலத்தில் பாய்க்கப்பலிற் கல்கத்தா சென்று, காசியை அடைந்து, கங்கையில் நீராடி, காசி விசுவநாதரையும் விசாலாட்சியையும் தரிசித்த புண்ணியம் இம் மூதாட்டிக்கு உண்டு. சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகக் காரைக்கால் அம்மையார் போல் தவ வாழ்க்கை நடத்திய இவ்வம்மையார் தமது 95ஆவது வயதில், எள்ளளவும் துன்பப்படாமல் அநாயாசமாக இறைவனடி சேர்ந்தார்.

சிதம்பரத்தில் இருந்து தமிழ்ப் பணியாற்றிய இலக்கண சுவாமிகள் என்னும் முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் தம் வாழ்நாள் முழுவதையும் சிவத்தொண்டுக்கே அர்ப்பணித்த மகான். இவர், சிவகாமித் தாயாரின் மைத்துனர் பிள்ளை. தமது 14ஆவது வயதில் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்று, தமிழகத்தில் சைவசாஸ்திரங்கள் பயின்று, துறவுபூண்ட சுவாமிகள், பல ஷேத்திரங்களையும் தரிசித்து, சிதம்பரத்தில் வாழ்ந்து, தொண்டாற்றி, 1949ஆம் ஆண்டு பரிபூரணம் எய்தினார். அவர் தமது சிறுவயதிலேயே இவ் வைரவ சுவாமியை வழிபட்டதன் பயனாக ஞானம்பெற்று, சைவ ஆதீனங்களின் பெருமதிப்புக்கு உரியராகி, அரிய பெரிய சைவ நூல்களை வெளிப்படுத்த உதவி புகழ் எய்தினார் போலும். அச்சகம் நிறுவிப் பல நல்ல நூல்களை வெளியிடுவது மேலான தொண்டாகும் என்ற அவருடைய தூய எண்ணமே ஒருமைத்தாகி, 'ஈழநாடு' ஸ்தாபனம் வளர்ந்தோங்கக் காரணமாகும்.

சிறு மண்டபத்திலிருந்த வைரவப் பெருமானுக்குக் கர்ப்பக்கிரகமொன்றுடன் கோவில் எடுத்து, முன் மண்டபமும் மணிக் கோபுரமும் கட்டுவித்து, முதன்முதலாகக் கும்பாபிஷேகம் செய்வித்த பேறு, சிவகாமித் தாயாரின் மைத்துனர் வெற்றிவேற்பிள்ளை மகள் தையல்முத்து அம்மையாரின் கணவர் அமரர் பிரபல ஆயுள்வேத வைத்தியர் கந்தப்பிள்ளை சிற்றம்பலத்தாருக்குரியதாகும்.

வைத்தியர் சிற்றம்பலத்தார் தமது இறுதிக் காலத்தை வைரவசுவாமியின் பணியிலேயே கழித்து, 1946ஆம் ஆண்டிற் சிவபதமடைந்த பின், அவரது பிரிய பத்தினியார் தையல் முத்து அம்மையார் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் வைரவசுவாமி கோவிற் பணிவிடைக்கே அர்ப்பணித்தார். இவர் வைரவப் பெருமானின் திருவடி நீழலைச் சேர்ந்தது 1961ஆம் வருடமாகும்.

இத்தம்பதியர் மறைந்தபின்னர், அவர்களது வழித்தோன்றல்கள் க. சி. தங்கராசா அவர்களும் சகோதரர் க. சி. சண்முகரத்தினம் அவர்களும் குடும்பத்தாருடன் தங்கள் முன்னோர்கள் செய்துவந்த சிவப் பணிகளைத் தொடர்ந்தனர் - தொடர்கின்றனர். அமரர் க. சி. சண்முகரத்தினம் அவர்கள் வைரவர்கோவிலுக்கு பல திருத்தங்கள் செய்வித்து, வெள்ளிக்கிழமைதோறும் சாயரட்சைப் பூசைக்குப்பின் கூட்டுப் பிரார்த்தனை நடத்தி, தாமும் குடும்பத்தார்களுடன் பங்குபற்றிவந்தார். அன்னாரின் புகழ்பெற்ற ஆயுள்வேத மருத்துவ நிலையம் வைரவப் பெருமான் நீழலில் இயங்கியது.

இக்கோவில் சிறியதாயினும், அதில் தெய்வீக அமைதியும் இயற்கை அழகும் கொஞ்சுவதை யோகர் சுவாமிகள் பன்முறையும் நேரில்வந்து அனுபவித்து, இது யாழ்ப்பாணத்தில் தமக்கு மிகவும் பிடித்த புனிதமுடைய சிறந்த இடமென்று பாராட்டியுள்ளார்கள். •

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் விலகும். உடல் நலம் சீராகும். அழகும் இளமையும் கூடும். விலை உயர்ந்த பொருள்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சின்ன சின்ன கவலைகள் வந்து போகும் உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை குறை கூற வேண்டாம்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். அரசு காரியங்கள் இழுபறியாகும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்சினைகள் வரும்.

**கடகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக்கொள்வீர்கள்.

**சிம்மம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

**கன்னி**
கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதிலும் உணர்ச்சி வசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். அடுத்தவர்களை குறை கூறுவதை நிறுத்துங்கள். கவனம் தேவைப்படும் நாள்

**விருட்சிகம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களால் ஆதாயம் அடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லை குறையும். வேற்றுமதத்தவர் உதவுவார்கள்.

**கும்பம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அரசாங்கத்தாலும் அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு.

# கச்சதீவில் புத்தர் சிலை; அகற்றுமாறு ஆணையிடுக

## இந்திய அரசிடம் ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, மார்ச் 27

இலங்கை கடற்படையால் கச்சத்தீவில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்ற இந்திய அரசு ஆணையிட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தனது ருவிற்றர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தியாவால் கொடையாக வழங்கப்பட்ட கச்சதீவில் மிகப்பெரிய புத்தர் சிலையை சிங்கள கடற்படை அமைத்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்த நடவடிக்கைக்கு தமிழகம் மற்றும் இலங்கையில் வாழும் தமிழர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர். சிங்கள அரசின் செயல் கண்டிக்கத்தக்கது!

கச்சதீவில் புனித அந்தோனியார் ஆலயம் மட்டுமே உள்ளது. அங்கு ஆண்டுதோறும்



நடைபெறும் திருவிழாவில் தமிழகம் மற்றும் ஈழத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட அனைத்து மதத் தமிழர்கள் பங்கேற்கின்றனர். அத்திருவிழா மத நல்லிணக்கத்தின் அடையாளமாக திகழ்கிறது.

புத்தர் சிலை அமைக்கப்பட்டிருப்பது கச்சதீவை சிங்கள மயமாக்கும் செயலாகும். புத்தர் கோயிலுக்கு ஆண்டு தோறும் திருவிழா நடத்தப்பட்டால் அது தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தக்கூடும். மத நல்லிணக்கத்துக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி விடும்.

இவற்றையும் கடந்து புத்தர் சிலை வழிபாடு என்ற பெயரில் சிங்களர்களையும், சீனர்களையும் கச்சதீவில் முகாமிடச் செய்து, தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியாவை உளவு பார்ப்பதற்கான வாய்ப்புகளை மறுக்க முடியாது. இது இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விடும்.

கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டாலும் கூட அந்தோனியார் ஆலயத் திருவிழா, அடிப்படை வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றுக்கு இந்தியாதான் உதவி வருகிறது. எனவே, இந்த விவகாரத்தில் இந்திய அரசு தலையிட்டு கச்சதீவில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்ற ஆணையிட வேண்டும்" - என்றுள்ளது. (ஐ)

# நீதிமன்றில் தமிழ் வழக்காடு மொழி; அரசமைப்பு திருத்தம் தேவைப்படலாம்!

## உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

மதுரை, மார்ச் 27

"உயர் நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை அறிவிக்க, ஒருவேளை அரசமைப்பு சட்டத் திருத்தம் தேவைப்படலாம்" என்று மதுரையில் நடந்த நிகழ்வில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் கூறினார்.

மேலும், "தமிழை வழக்காடு மொழியாக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒருவேளை அரசமைப்பு சட்டத்திருத்தம் தேவைப்படலாம். ஆங்கிலம் நமது முதல் மொழி அல்ல. நமது தாய் மொழியிலேயே நாம் பயிற்று விக்கப்பட்டோம். சில வழக்கறிஞர்கள் ஆங்கிலத்தில் உரையாடுவதில் சிரமத்தை எதிர் கொள்கின்றனர். இளம் வழக்கறிஞர்கள் மொழியை ஒரு தடையாகப் பார்க்கக்கூடாது. அந்த வழக்கறிஞர்களை நீதிபதிகள் ஊக்கப்படுத்த வேண்டும்.

இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்ற உத்தரவுகள் ஆங்கிலத்தில் இருக்கும்போது மாவட்டத்தில் உள்ள வழக்கறிஞர்கள் அதனை தங்கள் மொழியில் அறிந்து கொள்ள நாற்பது முதல் ஐம்பதாயிரம் வரை சந்தா செலுத்த வேண்டியதுள்ளது. தற்போது அது மாற்றப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# இலங்கை கடற்படை தமிழக மீனவர் பிரச்னைகளை கண்காணிக்கிறோம்

## மத்திய அமைச்சர் முருகன்

மதுரை, மார்ச் 27

இலங்கை கடற்படைக்கும், தமிழக மீனவர்களுக்கும் இடையே உள்ள பிரச்னைகளை கண்காணித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறியுள்ளார் இந்திய மத்திய அமைச்சர் எல். முருகன்.

நேற்று மதுரை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பிரதமர் மோடி ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற திட்டத்தின் கீழ் ஒரு மாத காலமாக கடந்த நவம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை காசி தமிழ் சங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் காசிக்கும், இராமேஸ்வரத்துக்கும் உள்ள தொடர்பு, காசிக்கும் சிவகாசிக்கும் உள்ள தொடர்பு, காசிக்கும் தென்காசிக்கும் உள்ள தொடர்பு தெரிய வந்தது.

தமிழகத்தில் உள்ள பல பகுதிகள் காசியுடன் தொடர்புடையவை. தமிழ் இலக்கியம் மற்றும் தமிழர்களின் உடைகளான பட்டு ஆடைகள், தமிழர்களின் உணவு பழக்க வழக்கங்கள் போன்றவற்றை எடுத்து கூறுகின்ற வகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன் தொடர்ச்சியாக தற்போது நம்முடைய சவுராஷ்டிரா தமிழ் சங்கம் சார்பில் வருகிற ஏப்ரல் 16ஆம் திகதி முதல் 10 நாட்களுக்கு குஜராத்தில் நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

சவுராஷ்டிரா மக்கள் தமிழகத்தில் மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர் மற்றும் பல பகுதிகளில் வசிக்கின்றனர்.

இலங்கை கடற்படைக்கும், தமிழக மீனவர்களுக்கும் இடையே உள்ள பிரச்னைகளை கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். எப்போதெல்லாம் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படுகிறார்களோ அப்போது தலையிட்டு நமது வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சு நடத்தி தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கிறார்.



படகுகள் விவகாரத்தில் கடந்த மாதம் 3 விசைப்படகுகளை விடுவித்திருக்கிறோம். மேலும் உள்ள விசைப்படகுகளை மீட்க பேச்சு நடத்தி வருகிறோம். தமிழக படகுகளை விடுவிக்க ஏற்பாடு நடந்து வருகிறது. மீனவர்களுக்கு காப்புறுதி திட்டம் இருக்கிறது. சேதமடைந்த படகுகளுக்கும் காப்புறுதி இருக்கிறது. மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பாரதிய ஜனதா - அ.தி.மு.க. கூட்டணியில் ந்த விரிசலும் இல்லை. கூட்டணி இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது - என்றார். (ஐ)





யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய பங்குனி குளிர்த்தி வெள்ளி ரத மஞ்சள் பால்குட பவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# வடக்கு மாகாண நிர்வாகத்துக்குள் தெற்கு இளைஞர்களுக்கு வேலை!

## அரசாங்கம் இரகசிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்டு பல ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றித் தவிக்க இராணுவத்தின் கீழ் நியமனம் வழங்கிய வடக்கு, கிழக்குக்கு வெளியில் உள்ள 427 பேரை வடக்கு மாகாண நிர்வாகங்களுக்குள் உட்புகுத்த இரகசிய நடவடிக்கை இடம்பெறுகிறது என்று தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் குற்றஞ்சாட்டுகின்றார்.

இது தொடரபில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் விபரம் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்திலே பி.எல். 3 எனப்படும் சாதாரண தொழிலாளர் வெற்றிடங்கள் 2,275 உள்ளன. இதிலே 1,275 வெற்றிடங்கள் உள்ளூராட்சி சபைகளில் காணப்படுகின்றன. இவ்வாறு உள்ளூராட்சி சபைகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரம் உள்ளூராட்சி சபைகளிடமே காணப்படுவதனால் அதனை உடன் ஆளுநரின் அனுமதியின பெயரில் நியமிக்க முடியாது என தவிர்க்கப்பட்டுள்ளது.

இதேநேரம் தற்போது உள்ளூராட்சி சபைகளும் இன்மையால் அந்த வெற்றிடங்களும் என்ன நடக்கும் எனக் கூறமுடியாத நிலை உள்ளதோடு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுக்கள் திணைக்களங்களில் உள்ள 1,275 வெற்றிடம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஆளுநரிடம் காணப்படுகின்றது.

இவ்வாறு ஆளுநருக்கு காணப்படும் அதகாரத்தை பயன்படுத்தி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதயாக இருந்த காலத்தில் இராணுவச் செயலணிகளால் வழங்கப்பட்ட நியமனத்தில் வடக்கில் இருந்த 119 பேருக்கும் கடந்த வாரம் கைதடியில் உள்ள வடக்கு மாகாணச் செயலகத்தில் நேர்முகத் தேர்வு இடம் பெற்றபோது 117 பேர் சமுகமளித்துள்ளனர். இவர்கள் வடக்கு மாகாண நிர்வாகங்களின் கீழ் உள்வாங்கப்படவுள்ளனர்.

அவர்களும் வட மாகாண இளைஞர்கள் எனபதனால் மௌனம் காத்தோம். இருந்தபோதும் தற்போது சப்ரகமுவா மற்றும் ஊவா மாகாணங்களில் இராணுவத்தினர் வழங்கிய நியமனங்கள் மிக அதிகமாக காணப்படுவதனால அங்கே காணப்படும் வெற்றிடங்களை நிரப்பிய பின்பும் மேலதிகமாக காணப்படும் 427 பேரும் வடக்கு மாகாணத்தில் நியமிக்க இரகசிய பணிகள் இடம்பெறுகின்றன.

இது வடக்கு மாகாண இளைஞர்களுக்கு கிடைக்க வேண்டிய உரித்து அதனை தட்டிப் பறிக்க நிணைக்கும் ஒருவரே ஆளுநராக இருப்பது வேதனையளிக்கின்றது. இதனை வடக்கு மாகாணத்தை சேர்ந்த இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுக்க ஆளுநர் முன்வர வேண்டும் மாறாக வெளியில் இருந்து நியமித்து இங்குள்ள இளைஞர்களை விரக்திக்கு தள்ளக்கூடாது என்பதோடு மாகாண சபையில் உருவாக்கப்பட்ட பிரமாணத்துக்கு அமைய அது வடக்கு மக்களுக்கு உரித்தானதாக இருப்பதனால் எம்மை மீண்டும் நீதிமன்றை நாடும் சூழலுக்கு தள்ள வேண்டாம் - என்றார். (ஐ)

# முல்லைத்தீவு விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மார்ச் 27

முல்லைத்தீவு - துணுக்காய் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

வீதியால் சென்று கொண்டிருந்த முதியவர்மீது மோதிவிட்டு தப்பி சென்ற வாகனம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. வீதி ஓராமாக விழுந்து காணப்பட்ட நிலையில் அவருடைய சடலம் மீட்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர் பனங்காமம் பகுதியை சேர்ந்த செல்வராசா ஜெயக்குமார் (வயது 49) என்ற குடும்பஸ்தர் என பொலிஸார் தெரிவித்தனர்

மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சடலம் மல்லாவி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிறை அதிகாரிகளிடமிருந்து தப்பிய கைதி மீண்டும் கைது!

வவுனியா, மார்ச் 27

வவுனியா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன்னிலைப்படுத்துவதற்காக அழைத்து செல்லப்பட்ட கைதியொருவர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றமை தொடர்பான காணொலி ஒன்று நேற்று வெளியானது. எனினும் அவர் பின்னர் கைது செய்யப்பட்டார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் அழைத்து வரப்பட்ட கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பித்து, வவுனியா மருத்துவமனையை அண்மித்துள்ள வயல்வெளியில் ஓடியபோது அவரை துரத்திச் சென்று அதிகாரிகள் கைது செய்தனர்.

இந்த சம்பவத்தை நேரில் கண்ட நபர் ஒருவர் கைபேசியில் காணொலியாக பதிவு செய்து வெளியிட்டுள்ளார்.

# துப்பாக்கி தவறுதலாக வெடித்தில் இளைஞர் பலி!

## மன்னாரில் பரிதாப சம்பவம்

மன்னார், மார்ச் 27

இருவரிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் ஒருவரை துப்பாக்கியால் அடிக்க முயன்றபோது அது தவறுதலாக வெடித்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் ஏகாம்பரம் சுகிர்தன் (சின்னா வயது -32) என்பவரே உயிரிழந்தார்.

மன்னார் மடு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தட்சணாமருதமடு பகுதியிலேயே நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தட்சணாமருதமடுவை அண்மித்த காட்டுப்பகுதிக்கு வேட்டைக்கு செல்வதற்காக நான்கு இளைஞர்கள் தயாராகி நாட்டு துப்பாக்கியுடன் (இடியன்) ஊருக்குள் நண்பர் ஒருவரை அழைக்க சென்றிருக்கின்றனர்.

அந்தச் சமயம் அவர்களில் இருவரிடையே ஏற்பட்ட தகராறு ஏற்பட்டது. இதன்போது, இடியன் துப்பாக்கியை கையில் வைத்திருந்த, உயிரிழந்த நபர் மற்றவரை இடியன் துப்பாக்கியால் அடிக்க முனைந்தார். அப்போது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் காயமடைந்தார்.

இதையடுத்து, பெரிய பண்டிவிரிச்சான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர், அங்கிருந்து யாழப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் வழியிலேயே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மாநகர ஆணையாளர் நாவலரை மதிக்க வேண்டும்!

## நாவலர் மகா சபை கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஆறுமுக நாவலர் பெருமானை யாழ் மாநகர சபை ஆணையாளர் மதித்து நடக்கவேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் தலைவர் சி. தனபாலா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் நேற்று அனுப்பி வைத்த அறிக்கை வருமாறு,

ஆறுமுக நாவலர் பெருமானை யாழ் மாநகர சபை ஆணையாளர் மதித்து நடக்கவேண்டும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கான நாவலர் கலாசார மண்டபத்திலே நாவலர் பணியை நாவலர் பெருமான் பிறந்த இருநூறாவது அகவை ஆண்டு நிறைவுடன் முன்னெடுத்த வண்ணம் உள்ளது.

பல இழுபறிகளுக்குப்பின்னர் இரு தரப்பு ஒப்புதல்களோடு நாவலர் கலாசார மண்டபத்திலே இணைந்த பணியை முன்னெடுப்பது என்ற முடிவின் அடிப்படையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் யாழ். மாநகர சபை நிர்வாகமும் இணைந்து செயல்படுவது என்ற முடிவு எட்டப்பட்டிருந்தது.

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர்களான இ. ஆனல்ட், வி. மணிவண்ணன் முதலானோர் இச் செயல்பாடுகளுக்குத் துணை நின்றபோதும், யாழ். மாநகர ஆணையாளரின் நடவடிக்கை தான்தோன்றித் தனமாகவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாவலர் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்துவருவது வருத்தத்திற்குரியது.

கடந்த ஒரு சில நாட்களுக்கு முன்பு நாவலர் கலாசார மண்டபத்திலே நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்காக, யாழ். மாநகர சபை ஆணையாளரின் உத்தரவின்பேரில் , சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஒரு தேசிய வீரரை அவருக்கென்று அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்திலேயே அவமதிக்கும் விதத்தில் நாவலர் பெருமானின் திருவுருவப் படம் கழற்றப்பட்டு ஒரு மூலையில் போடப்பட்டுள்ளது. இந்த அநாகரிக செயல்பாட்டுக்கு உரிய தரப்பினரால் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கனவே இணங்கிய வகையில் நாவலர் கலாசார மண்டபத்திலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் சுதந்திரமான முறையில் நாவலர் பணியை முன்னெடுப்பதற்கும் யாழ். மாநகர சபை பொது நூலகத்தை நாவலரின் ஞாபகார்த்த நூலகமாக யாழ் மாநகர சபை செயல்படுத்துவதற்கும் உரியதரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நாவலர் கலாசார மண்டபம் உருவாக பலவழிகளிலும் துணைநின்ற ஆறுமுகநாவலர் சபையின் எதிர்பார்ப்பை உரியவர்கள் மதித்து நடக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# 600 எரிபொருள் நிலையங்களை தனியார்மயமாக்க அரசு முயற்சி!

## பெற்றோலிய தொழில்சங்கம் சாடல்

கொழும்பு, மார்ச் 27

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 600 எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு தனியார் நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை தனியார்மயமாக்கினால் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொழில்வாய்ப்புகளை இழப்பார்கள் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சேவை சங்க தலைவர் ஜகத் விஜயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

துறைமுகம், மின்சாரம் மற்றும் பெற்றோலியம் ஆகிய துறைகளின் தொழில்சங்க தலைவர்களுடன் நேற்று நடந்த பேச்சின் பின்னர், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் கொள்வனவுக்கு தேவையான டொலரை சுயமாக திரட்டிக் கொள்கிறது. கூட்டுத்தாபனம் கடந்த ஜனவரி மாதம் 1300 கோடி ரூபாய், பெப்ரவரி மாதம் 900 கோடி ரூபாய் இலாபமடைந்துள்ளது. இவ்வாறு இலாபமடையும் நிறுவனத்தையே அரசாங்கம் தனியார்மயப்படுத்த தீர்மானித்துள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 600 எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கினால் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொழில்வாய்ப்புகளை இழக்க நேரிடும். இதனால் நாட்டில் பெரும் பிரச்னைகள் தோற்றம் பெறும்.

மறுசீரமைப்பு என்று குறிப்பிட்டுக்கொண்டு அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும்போது பலர் தொழில் வாய்ப்புகளை இழப்பார்கள். இதற்கான மாற்று நடவடிக்கைகள் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் பதிலளிக்கவில்,

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த பகுதியை சீனாவின் சினொபெக் நிறுவனத்துக்கும், திருகோணமலை துறைமுகம் மற்றும் அதனை அண்மித்த பகுதியை இந்தியாவுக்கும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கீரியும் பாம்பும் போல் பகைத்துக்கொள்ளும் சீனா, இந்தியா ஆகிய நாடுகள் இலங்கைக்குள் முரண்பட்டுக்கொண்டால் தேவையில்லாத பிரச்னையை நாடு எதிர்கொள்ள நேரிடும்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை தனியார்மயப்படுத்தும் செயல்பாட்டுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. சகல தொழில்சங்கங்களையும் ஒன்றிணைத்து மாபெரும் தொழில்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் - என்றார். (ஐ)

# வாக்குசீட்டு அச்சிட்ட ஊழியர்க்கு நான்கு கோடி ரூபாய் நிலுவை!

கொழும்பு, மார்ச் 27

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டு மற்றும் வாக்குச் சீட்டு அச்சடிக்கும் பணிகளில் ஈடுபட்ட அரச அச்சக ஊழியர்களின் கொடுப்பனவுக்கான நான்கு கோடி ரூபாயைத் திறைசேரி இதுவரை செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி கல்பனா லியனகே திறைசேரியிடம் கேட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய ஆவணங்களுக்காக அரசாங்க அச்சகம் இது வரை 15 கோடி ரூபாய்க்கும் அதிகமாக செலவிட்டுள்ளது.

இதேவேளை, நிதிப் பிரச்னை காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதை அரசாங்க அச்சகம் முற்றாக நிறுத்தியுள்ளது. தற்போது வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கு பணத்தை வழங்க முடியாது என திறைசேரி அண்மையில் அரசாங்க அச்சகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலவச அரிசி திட்டம் இன்று ஆரம்பமாகிறது!

கொழும்பு, மார்ச் 27

29 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி, விவசாயிகளிடம் இருந்து வாங்கும் நெல்லை அரிசியாக மாற்றி, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசு வழங்கவுள்ளது.

ஒரு குடும்பத்துக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசி வீதம் இரண்டு மாதங்களுக்கு இலவச அரிசி வழங்க அரசாங்கம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# வெளிநாடு செல்பவர்கள் இணையம் மூலம் பதியலாம்!

கொழும்பு, மார்ச் 27

தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு பணியகத்தின் இணையத்தளம் ஊடாக பதிவு செய்வதற்கான வாய்ப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

றறற.எடடிகந.டம என்ற இணையத்தளத்தில் சுயப் பதிவை (online self registration) அணுகுவதன் மூலம் இந்தப் பதிவை மேற்கொள்ள முடியும் என பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். (ஐ)

# கடல் அலைகள் இழுத்துச் சென்ற நால்வரை காப்பாற்றிய பொலிஸ்!

கொழும்பு, மார்ச் 27

கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது அலையில் அடித்துச்செல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரை களுத்துறை - பாணந்துறை பொலிஸ் உயிர் காப்புப் பிரிவினர் காப்பாற்றியுள்ளனர்.

களுத்துறை வடக்கு, கல்படயகம பிரதேசத்தில் வசிக்கும் 29 மற்றும் 35 வயதுடைய தம்பதியரும், 13 மற்றும் 29 வயதுடைய அவர்களின் சகோதரர்களுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரும் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் பாணந்துறை கடற்கரையில் நீராடிக்கொண்டிருந்த போது அலையில் சிக்கி சுமார் 50 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பாணந்துறை பொலிஸ் உயிர்காப்பு பிரிவின் பொலிஸார் மற்றும் சுழியோடிகள் உடனடியாக செயல்பட்டு அவர்கள் அனைவரையும் காப்பாற்றினர். காப்பாற்றப்பட்டவர்கள் பாணந்துறை போதனா மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# விலைச்சூத்திரத்துக்கு அமைய பேருந்து கட்டணம் குறையும்!

## போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

எதிர்காலத்தில் போக்குவரத்து கட்டணங்கள் குறைக்கப்படும். விலைச் சூத்திரத்துக்கு அமைய இந்த கட்டண குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். களுத்துறையில் இடம் பெற்ற புதிய பேருந்துகள் கையளிப்பு நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாணய மாற்று விகிதம் நிலையாகவிருந்த டொலருக்கு செலுத்த வேண்டிய ரூபாய் பெறுமதி குறைந்ததால் நமது எரிபொருள் செலவு குறையும். உதிரிப் பாகங்கள் மற்றும் பிற இறக்குமதி பொருட்களின் விலை குறைக்கப்படும்போது, செலவு குறைப்பின் பலனை மக்களுக்கு வழங்க முடியும். இதேபோன்று விலைச் சூத்திரத்தின்படி பேருந்து கட்டணமும் குறைக்கப்படும் - என்றார். (ஐ)



# மதுபானம், புகையிலை வரிகளை உயர்த்த முடிவு

கொழும்பு, மார்ச் 27

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின்படி, ஜூன் மாதத்தில் மதுபானம் மற்றும் புகையிலை மீதான வரிகளை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதமாக வரி வருவாயை உயர்த்துவதை அரசு இலக்காகக் கொண்டுள்ளது.

மேலும், நாடு முழுவதும் சொத்து வரியை அறிமுகப்படுத்தவும், நிதி பரிமாற்றங்களை மதிப்பாய்வு செய்யவும், ஜனவரி 1, 2025 முதல் வரி இல்லாத கொடுப்பனவு மற்றும் குறைந்த பட்ச விலக்களிப்புகளுடன் பரிசு மற்றும் பரம்பரை வரியை அமுல்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் அமைச்சர்கள் இந்த வரி உயர்வுகளால் பாதிக்கப்படுவர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# சிறுவர் போசாக்கு இன்மை ஆராய்வதற்கு குழு நியமனம்!

கொழும்பு, மார்ச் 27

இலங்கையில் சிறுவர்களின் போசாக்கு இன்மை நிலை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் அறிந்து கொள்ளவும் அவ்வாறு அதிகரித்துள்ளது என்றால் அது தொடர்பில் குறுகிய கால மற்றும் நடுத்தர நீண்ட கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தால் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுமார் இருபது பேர் அடங்கிய குறித்த குழுவுக்கு தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# பால் தேநீரின் விலை ரூ.10ஆல் குறைகிறது

கொழும்பு, மார்ச் 27

பால்தேநீர் ஒன்றின் விலையை இன்று திங்கட்கிழமை முதல் 10 ரூபாவால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பால்மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளமையை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.



இதற்கமைய பால் தேநீர் கோப்பை ஒன்றின் விலை 90 ரூபாயாக குறைக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இன்று திங்கட்கிழமை முதல் ஒரு கிலோ கிராம் பால்மா பைக்கெற்று 200 ரூபாயாலும் 400 கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 80 ரூபாயாலும் குறைக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கை மத்திய வங்கியையும் சுயாதீனமாக மாற்ற நடவடிக்கை

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, மார்ச் 27

நாட்டின் சுயாதீன ஆணைக் குழுக்கள் வலுவிழந்துள்ளன. அவற்றின் அதிகாரங்கள் ஜனாதிபதியின் கைகளில் ஊச லாடிக் கொண்டிருக்கின்றன. தற்போது மத்திய வங்கியையும் சுயாதீனமாக மாற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக் கப்படுகிறது. எதிர்காலத்தில் மத்திய வங்கியும் சுயாதீனமாக மாற்றப்படுமாயின். நிச்சயம் அது அரசாங்கத்தை பாதுகாக் கும் வேலைத்திட்டமாகவே அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் வேலுகுமார் தெரிவித் துள்ளார்.

கண்டி, நாவலப்பிட்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இன்று நாட்டில் காணப்படு கின்ற சுயாதீன ஆணைக்குழுக் கள் ஜனாதிபதி கைகளில் ஊச லாடிக்கொண்டிருக்கிறன. நாட் டுக்கும், சர்வதேசத்துக்கும் தெரி யும், நாட்டின் தேசிய தேர்தல் கள் ஆணைக்குழுவின் நிலைமை எவ்வாறு உள்ளதென்பது.

இவ்வாறானதொரு நிலை யில் இலங்கை மத்திய வங் கியை சுயாதீனமாக மாற்றுவ தற்கு முயற்சிக்கின்றனர். நாட்டின் இன்றைய பொரு ளாதார நிலைக்கும், பொரு ளாதார நெருக்கடிகள் உக்கிர மடைந்து வங்குரோத்து நிலைக்கு நாடு செல்வதற்கும் இலங்கை மத்திய வங்கியை முகாமை செய்தவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் நண்பர் அர்ஜுன் மகேந்திரன் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார். இவ்வா றான ஆளுநர்களின் செயல் பாடுகள், பிழையான கொள்கை கள், பிழையான வழிமுறை ளால்தான் இந்த மோசமான நிலைக்கு நாடும், நாட்டு மக்க ளும் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் எதிர்காலத் தில் இலங்கை மத்திய வங்கி யின் செயற்பாடுகளை ஒழுங்கு முறைப்படுத்தவும், சரியான முறையில் நடைமுறைப்படுத்த வும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து மத்திய வங்கியினை சுயாதீனமாக மாற்றுகின்றோம் என்று கூறுகிற வகையில், அதி லிருக்கும் ஆளுநராக இருக்க லாம் அல்லது நிர்வாக சபை யாக இருக்கலாம். அதன் அங்கத்தவர்களை நியமிக்கும் போது, அது அரசியல் நியமன மாக அமையும்.

மேலும், ஜனாதிபதி உள் ளிட்ட அரசாங்கம் இதனை மேற்கொள்ளுமாயின், அங்கு இருக்கும் வேலைத்திட்டம் அரசாங்கத்தை காப்பாற்றும் வேலைத்திட்டமாகவே கருதப் படும். இவ்வாறானதொரு நிலைமை எமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டி யெழுப்ப சரியானதொரு வழி முறையல்ல - என்றார்.

(ஐ)

# அதிசக்தி திறனுடைய மோ. சைக்கிள்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 27

சுமார் ஏழு கோடி ரூபாய் பெறுமதியான 8 அதிசக்தி வாய்ந்த மோட்டார் சைக்கிள்க ளுடன் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வு பொலிஸின் கல்கிசை பிரிவின் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்த வர்த்தகர் கைது செய்யப்பட்டார்.

பொரலஸ்கமுவ - பல்க லைக்கழக வீதியிலுள்ள தனக் குச் சொந்தமான நிறுவன மொன்றில் சந்தேக நபர் இந்த மோட்டார் சைக்கிள்களை இரகசியமாக மறைத்து வைத் திருந்த நிலையில் இவை கைப் பற்றப்பட்டன. கைப்பற்றப் பட்ட மோட்டார் சைக்கிள்க ளில் 6இற்கு பதிவுகள் உள்ளன. ஏனைய இரு மோட்டார் சைக் கிள்களுக்கும் பதிவுகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நட வடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

# வீதி வியாபாரத்துக்கு ஏப்ரலில் அனுமதி!

கொழும்பு, மார்ச் 27

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து 12ஆம் திகதி வரை நாட்டின் எந்த வீதியின் இரு மருங்குகளிலும் தங்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு பொதுமக்களுக்கு அனுமதியளிக்கப்படவுள்ளது.

அமைச்சரவை பேச்சாள அமைச்சருமான பந்துல குண வர்த்தன இதனைத் தெரிவித் துள்ளார்.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட அனுமதி வழங்கப்படு வதாக அவர் தெரிவித்தார். பிர தேச செயலகங்களில் அறிவித்த பின்னர் இடையூறின்றி தங்கள் உற்பத்திகளை வீதியின் இரு மருங்கிலும் பொது மக்கள் விற் பனை செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் இளைஞருக்கு பொலிஸ் வலை!

வவுனியா, மார்ச் 27

தனியார் வகுப்புக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண் டிருந்த 14 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இளைஞரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் வவுனியா பாரதிபுரம் பகுதியில் கடந்த 22 ஆம் திகதி மாலை இடம்பெற் றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தனியார் வகுப்புக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டி ருந்த குறித்த சிறுமி வீதியில் மறித்த இளைஞர் ஒருவர் அவ ருக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக சிறுமி தனது பெற்றோருக்கு தெரியப் படுத்தியுள்ளார். சிறுமியின் பெற்றோர் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். முறைப்பாட்டையடுத்து பொலிஸார் சிறுமியை மருத்துவமனையில் சேர்த்து மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

பொலிஸார் இளைஞரை தேடிச் சென்ற நிலையில் அவர் தலைமறைவாகியுள்ளார். அந்த இளைஞரை கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர்.

(ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் பிரதமருக்கு தேர்தல் குழு கடிதம்!

கொழும்பு, மார்ச் 27

உள்ளூராட்சி சபைத் தேர் தல் தொடர்பில் கலந்துரை யாடுமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் எழுந்துள்ள பிரச் னைகள் குறித்து கலந்துரை யாடவே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக குறிப் பிட்டுள்ளார்.

இது தொடர்பான கோரிக்கை எழுத்து மூலம் பிரதமருக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்த லில் வேட்பாளராக போட்டி யிடும் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர் பில் எழுந்துள்ள பிரச்னைகள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்த எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவை அழைத்து கலந்துரையாடுவ தற்கு தீர்மானித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன அண்மையில், பாராளு மன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் விசேட குழு வொன்றை நியமிக்க அரசாங் கம் முயற்சித்து வருவதாக பவ் ரல் அமைப்பு தெரிவித்துள் ளது.

(ஐ)

# 25 ஆண்டுகளில் இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாகும்!

## ஜனாதிபதி ரணில் உறுதி

கொழும்பு, மார்ச் 27

இலங்கை எந்த நேரத்திலும் அரசியல் ஸ்திரத்தன்மையை தக்கவைத்துக்கொள்ளும். அதேநேரம் மிகப்பெரிய பொருளாதார குழுவொன்று டன் முன்னோக்கி பயணிக்க எதிர்பார்க்கிறது.

இலங்கை அடுத்த 25 வரு டங்களுக்குள் இந்து சமுத்திரத் தின் ஏனைய நாடுகள் மற்றும் தெற்காசியாவுடன் இணைந்து பயணித்து மிகப்பெரிய அபிவி ருத்தி இலக்குகளை அடையும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

மேற்படி, 25 வருடகால புதிய மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் இலக்குகளை நோக்கி அரசாங்கம் நாட்டை கொண்டுச் செல்லும் என எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை முன்னேற்றுவதற்காக தொடர்ச்சியான வேலைத் திட்டங்களில் இணைந்து கொள்ளுமாறு புலம்பெயர் மற்றும் இந்நாட்டின் இளம் சமுதாயத்தினருக்கு அழைப்பு விடுத்தார்.

ஹார்வட் பல்கலைக்கழகத் தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நேர்காணல் ஒன்றில் மெய்நிகர் வழியில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலனித்துவ ஆட்சியிலி ருந்து விடுதலை பெற்று 100 வருடங்கள் பூர்த்தி ஆகின்ற 2048 ஆம் ஆண்டில் இலங்கை நடுத்தர வருமானம் ஈட்டும் நாடாக மாறும் எனவும் அவை அனைத்தும் பொருளாதார மறுசீரமைப்புக்கான அர்பணிப் பிலேயே தங்கியுள்ளதெனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அதற்காக நமது மூலோபாய அமைவிடத்தை பயன்படுத் திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாம் பலமான ஜனநாயக கட்டமைப்பையும் திறந்த பொருளாதாரத்தையும் கொண் டுள்ள சிறியதொரு நாடு என்ற வகையில் அரசியல் ஸ்திரத் தன்மையை பேணி வருகின்ற அதேநேரம் எமது அயல்நாடும் நீண்ட கால உறவை பேணி வரும் நாடுமான இந்தியாவை வலயத்தின் பாதுகாவலனாக கருதுகிறோம் எனவும் சுட்டிக் காட்டினார்.

பழமையான பொருளாதார கொள்கைகளுடன் புத்துயிர் பெற்றுவருகின்ற ஆசிய வலயம் மற்றும் இந்தியாவின் அபி விருத்திச் செயல்பாடுகளோடு கைகோத்துக்கொண்டு பொரு ளாதாரத்தை கட்டியெழுப்பும் பணிகளில் இலங்கை முன் நின்று செயற்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அவர்கள் தெரிவித்தார்.

இந்தியாவுடன் காணப்படு கின்ற சுதந்திர வர்த்தக ஒப்பந் தத்தை பொருளாதார ஒத்து ழைப்பு மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தமாக மாற்றியமைத்துக் கொள்வது சிறந்தது என்றும் ஆசியாவின் மிக நீண்ட பொரு ளாதார கூட்டிணைவுடன் பொருளாதார ஒப்பந்தங்களை கைசாத்திடுவதால் உலகின் மிகப்பெரிய பொருளாதார குழுவுடன் முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு கிட் டும் என்றும் வலியுறுத்தினார்.

(ஐ)

# தாயாரை கொன்ற படை சிப்பாய் கைது!

கொழும்பு, மார்ச் 27

தனது தாயாரை கழுத்தை நெரித்துக் கொன்ற படைச் சிப்பாய் ஒருவரை 8 ஆண்டுகளின் பின்னர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் - கெப்பிற்றிகொலாவையில் இந்தச் சம்பவம் கடந்த 2015 ஜூன் 5ஆம் திகதி இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

விசாரணையில், படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் அவர் இறுதி யுத்தத்தின்போது தாக்குத லில் உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரி வித்துள்ளனர். மகனால் துன்புறுத்தப்படுவதாக தாய் பல முறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். முன்னதாக மகன் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சந்தேக நபர் தாயை கழுத்தை நெரித்து கொலை செய்தார் என்று தடயவியல் அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சிப்பாயைக் கைது செய்துள்ள பொலி ஸார் நீதிமன்றம் ஊடாக அவருக்கு தண்டனையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை எடுத்துள்ள னர்.

(ஐ)

# காலநிலை மாற்ற சவால்கள்: வளிமண்டலத்தில் இருந்து கரியமில வாயுவை நீக்க முடியுமா?



காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த வளி மண்டலத்தில் கலந்துள்ள கார்பனை உறிஞ்சி வெளியே எடுக்க வேண்டியிருப்பதாக ஐ.நா.வின் காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச குழு தெரிவித்துள்ளது.

மனித குலமே ஒரு மெல்லிய பனிக்கட்டியின் மீது இருக்கிறது. புதைபடிம எரிபொருள் பயன்பாட்டை துரிதமாகக் குறைப்பது, திறனை அதிகரிப்பது, அனைத்துத் துறைகளிலும் கரியமில வாயு உமிழ்வை கணிசமாக குறைப்பது ஆகியவை மூலமே காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளைத் தவிர்க்க முடியும் என்று ஐ.நா.வின் காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச குழு அறிக்கை கூறுகிறது.

மனித குலம் பிழைத்திருப்பதற்கான வழிகாட்டுதலின்படி இந்த புதிய அறிக்கை செயல்பட வேண்டும் என்கிறார் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஷ். காலநிலை மாற்றத்தை தடுக்கும் நடவடிக்கையில் எல்லா இடங்களிலும், அனைத்தும் ஒரே நேரத்தில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் பரிந்துரைத்துள்ளார்.

**என்ன செய்ய வேண்டும்?**

அறிவியலாளர்களின் பார்வையில், வளி மண்டலத்தில் உமிழப்படும் கார்பன் அளவை குறைக்க வேண்டும் என்ற பரிந்துரையுடன், ஏற்கெனவே காற்றில் கலந்துள்ள கார்பன் - டை - ஒக்சைடை நீக்கும் நடவடிக்கையும் அவசியம்.

வளி மண்டலத்தில் உள்ள கார்பனை வெளியேற்றும் பல்வேறு வழிமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை இது குறிப்பிடுகிறது. இதனால், புவி வெப்பமாதலுக்குக் காரணமான பசுமை விளைவுக்கு அது பங்களிப்பது தடுக்கப்படும்.


வளி மண்டலத்தில் மனிதர்கள் சேர்க்கும் கார்பனை, அங்கிருந்து உறிஞ்சி எடுப்பதே இந்த யோசனை. வளி மண்டலத்தில் இருந்து கார்பன்-டை-ஒக்சைடை நேரடியாக உறிஞ்சி எடுப்பது.

கார்பனுடன் பயோ-ஆற்றலை சேகரித்து சேமிப்பது, பேசால்ட் போன்ற சிலிகேட் பாறைகளை பூமியின் மேற்பரப்பில் வைத்து இயற்கையாக கார்பன்-டை-ஒக்சைடு அளவை கட்டுப்படுத்துவது ஆகிய வாய்ப்புகள் நம் முன்னே உள்ளன.

மேலே முன்மொழியப்பட்ட, கார்பன்-டை-ஒக்சைடை அகற்றும் வழிமுறைகள் காலநிலையில் அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் என்ன? இதைக் காட்டிலும் சிறந்த வாய்ப்புகள் உள்ளனவா? கார்பன்-டை-ஒக்சைடை நீக்கும் செயல் திட்டத்தில் எவையெல்லாம் ஆபத்தானவையாக இருக்கும்?

பல தசாப்தங்களாக கரியமில வாயுக்கள் உமிழ்தலைக் கட்டுப்படுத்த உலகம் தவறிவிட்டது. இதனால், காலநிலை மாற்றத்தின் அபாயத்தை கட்டுப்படுத்த வளி மண்டலத்தில் இருந்து கார்பன்-டை-ஒக்சைடு நீக்கம் அவசியம் என்று சில அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

வளி மண்டலத்தில் இருந்து கார்பன்-டை-ஒக்சைடை நீக்குவது நம் முன்புள்ள தெரிவு அல்ல - அது கட்டாயம் என்று ஐ.பி.சி.சி. அறிக்கை கூறுகிறது என்கிறார் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தின் காலநிலை மற்றும் சமூகத்துறை விரிவுரையாளர் ராப் பெல்லமி. அதேவேளையில், கார்பன் நீக்க வழிமுறைகளாலும் மக்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு சில அபாயங்கள் இருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.




”எந்த வழிமுறையை முன்னெடுக்கலாம்? அதனை எவ்வாறு ஊக்கப்படுத்தலாம்? இறுதியாக அதனை எவ்வாறு நிர்வகிக்கலாம்? என்பது குறித்து நம் சமூகத்தில் விரிவான உரையாடல் அவசியம். எந்த தவறும் செய்யாதீர்கள். நாம் கார்பன் நீக்கம் செய்ய வேண்டும். ஆனால், அதை நாம் பொறுப்புடன் செய்ய வேண்டும்” என்று அவர் கூறியுள்ளார்.

கார்பன்-டை-ஒக்சைடை நீக்கும் அதேவேளையில், எஞ்சியிருக்கும் கரியமில வாயுக்கள் உமிழ்வைக் குறைப்பது சவாலான ஒன்று என்பதையும் ஐ.பி.சி.சி. அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஏனெனில், வேளாண்மை, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து மற்றும் தொழில்துறைகளில் இந்த வகை கரியமில வாயுக்கள் வெளியேற்றப்படுவதாக அந்த அறிக்கை கூறுகிறது.

(தொழில்நுட்பக் குறைபாடு அல்லது கார்பன் பயன்பாட்டை நீக்க ஆகும் பெரும் பொருட்செலவு ஆகியவற்றால் இந்த துறைகளில் கரியமில வாயுக்களை நீக்குவது கடினமான ஒன்று என்று கருதப்படுகிறது)

ஆனால், எல்லா அறிவியலாளர்களும் இதனை ஒப்புக் கொள்ளவில்லை. கார்பன்-டை-ஒக்சைடு நீக்கத்தை பெரிய அளவில் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சிலர் கவலை தெரிவிக்கின்றனர். அதையே பெருமளவில் சார்ந்திருப்பது தவறாக முடியக் கூடும் என்று அவர்கள் எச்சரிக்கின்றனர்.




ஆனால், கரியமில வாயுக்களின் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் பொறுப்பில் இருந்து தப்ப அரசாங்கங்கள் இதையே ஒரு சாக்காக பயன்படுத்தும் வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

”படிம எரிபொருளுக்குப் பதிலாக புதுப்பிக்கத்த எரிசக்திக்கு மாறுவது, எரிசக்தித் திறனை அதிகரிப்பது, ஆற்றலையும், ஆற்றல் வளங்களையும் பயன்படுத்துவதைக் குறைப்பது ஆகிய நம்மிடையே தற்போதுள்ள தீர்வுகளை திறம்பட பயன்படுத்துவதன் மூலமே காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தி புவி வெப்பமாதலை 1.5 டிகிரி செல்சியசுக்கு குறைத்து விட முடியும் என்று ஐ.பி.சி.சி. அறிக்கை கூறுகிறது,” என்கிறார் லிலி பூர்.

இவர், ஜெனீவாவில் இருந்து செயல்படும் சர்வதேச காலநிலை சட்ட மையம் என்ற தன்னார் தொண்டு நிறுவனத்தின் காலநிலை மற்றும் ஆற்றல் திட்ட உதவி இயக்குநராக இருக்கிறார்.

“கரியமில வாயுக்களின் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, வளி மண்டலத்தில் கலந்துவிட்ட கார்பனை சேகரித்து சேமிப்பது மற்றும் கார்பன்-டை-ஒக்சைடு நீக்கம் சிறந்த பலனைத் தரும் என்று கருதி காலநிலை மாற்ற விளைவுகளை தணிக்கும் உத்தியைக் கைவிட்டால் வளி மண்டலத்தில் அது மோசமான விளைவைத் தரும். கரியமில வாயுக்களின் அளவை அதிகரித்துவிடக் கூடும்” என்கிறார் பூர்.

உலகம் முழுவதும் நீக்கப்பட வேண்டிய கார்பன்-டை-ஒக்சைடு அளவு குறித்த முதல் மதிப்பீட்டை இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் தலைமையிலான குழு அறிக்கை அளித்துள்ளது.




ஆண்டுக்கு 200 கோடி டன் கார்பன்-டை-ஒக்சைடை நீக்க வேண்டியிருக்கும் என்கிறது அந்த அறிக்கை. அவற்றில் பெருமளவு நிலத்தில் இருந்தே அகற்றப்பட வேண்டியுள்ளது.

2022-ம் ஆண்டு படிம எரிபொருள் மற்றும் சிமெண்ட் பயன்பாட்டின் மூலம் வளி மண்டலத்தில் உமிழப்பட்ட 3660 கோடி டன் கார்பன்-டை-ஒக்சைடு என்ற அளவில் கிட்டத்தட்ட 5 சதவீதமாகும்.

ஆனால், கார்பன்-டை-ஆக்சைடு நீக்கத்தின் அளவை தற்போதுள்ளதைக் காட்டிலும் அதிகரிக்க நாடுகள் சில திட்டங்களை வகுத்துள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது.

காலநிலை மாற்ற குறிக்கோளை அடைய, கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்துதல் என்பது உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகளை ஐ.பி.சி.சி. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அந்த வழிமுறைகளில் பெரும்பாலானவை, பாரிஸ் ஒப்பந்தப்படி புவி வெப்பமாதலை 1.5 டிகிரி செல்சியஸ் அல்லது 2 டிகிரி செல்சியசுக்கும் கீழே குறைக்கும் இலக்கை அடைவதற்கு கார்பன் நீக்கமும் அவசியம் என்று கூறுகின்றன.

ஐ.நா. மாநாட்டில் நாடுகள் அளித்த உறுதிமொழியை முழுமையாக செயல்படுத்தினால் 2100-ம் ஆண்டில் பூமி 2.4 டிகிரி செல்சியஸ் வெப்பமடையும். அதேநேரத்தில், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கொள்கைகளை மட்டும் அந்த நாடுகள் தொடர்ந்தால் 2100-ம் ஆண்டில் பூமி 2.8 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பமாகும்.

இந்த இலக்கை எட்டுவதற்கு எவ்வளவு கார்பன் நீக்கம் செய்யப்பட வேண்டும் என்பதை கார்பன் உமிழ்வு எந்த அளவுக்கு கட்டுப்படுத்தப்படுகிறது என்பதைக் கொண்டே தீர்மானிக்க முடியும். இதுவே, நீக்கப்பட வேண்டிய கார்பன்-டை-ஒக்சைடு அளவை துல்லியமாக தீர்மானிப்பதை சவாலான ஒன்றாக்குகிறது. கார்பன்-டை-ஒக்சைடு நீக்கத்தைக் குறைக்க வேண்டும் என்றால், கார்பன் உமிழ்வை கணிசமாகவும், துரிதமாகவும் குறைப்பது அவசியம்.

ஐ.பி.சி.சி. அறிக்கையின் சில கணிப்புகள் “கிளைமேட் ஓவர்ஷூட்” இருக்கக் கூடும் என்றே குறிப்பிடுகின்றன. அதாவது, 1.5 டிகிரி செல்சியஸ் என்ற இலக்கை எட்டுவதற்கு முன்பாக சில காலம் பூமியின் வெப்பம் அதைக் காட்டிலும் அதிகமாக இருக்கக் கூடும். பூமியின் வெப்பநிலையைக் குறைப்பதில் கார்பன்-டை-ஒக்சைடு நீக்கம் தேவைப்படலாம் என்று ஐ.பி.சி.சி. கூறுகிறது.

வளி மண்டலத்தில் இருந்து கார்பன்-டை-ஒக்சைடை நீக்குவதற்காக அதிகம் பேசப்படும் மற்றொரு வழிமுறை நேரடி காற்று சேகரித்தல். இதன்படி, வளி மண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஒக்சைடு வாயு சில கருவிகள் மூலம் நேரடியாக உறிஞ்சப்படும்.

சி.சி.எஸ். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த கார்பன்-டை-ஒக்சைடை நிரந்தரமாக பூமிக்கடியில் சேமித்து வைத்துவிட்டால், நிகர கார்பன் உமிழ்வு எதிர்மறையாகிவிடும் அதாவது குறைந்து விடும். 2020-க்கும் 2022இற்கும் இடைப்பட்ட காலத்தில் பெரும்பாலான முதலீடுகள் இந்த திட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளன.

**பயோக்கர் வழிமுறை**

கார்பன்-டை- ஒக்சைடு நீக்கத்திற்கு பயோக்கர் வழிமுறையைப் பயன்படுத்துவது மரங்கள் அல்லது தாவரங்கள் பயன்பாட்டை உள்ளடக்கியது.

வளரும் போது கார்பன்-டை-ஒக்சைடை எடுத்துக் கொள்ளும் அந்த தாவரங்கள் ஒக்சிஜன் அற்ற சூழலில் வெப்பப்படுத்தப்பட்டு கருப்பு நிறத்தில் கார்பனை மட்டுமே பிரதானமாகக் கொண்ட நிலக்கரி போன்ற பொருள் தயாரிக்கப்படும்.

இதனை மண்ணுடன் கலந்துவிடுவதன் மூலம் கார்பனை வளிமண்டலத்தில் இல்லாமல் செய்து விடலாம். மேம்படுத்தப்பட்ட பாறை காலநிலை சமப்படுத்துதல்.

மேம்படுத்தப்பட்ட பாறை காலநிலை சமப்படுத்தல் என்ற வழிமுறையும் வளி மண்டலத்தில் இருந்து கார்பனை வெளியேற்ற முன்மொழியப்பட்டுள்ளது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# “தகரம் எடுக்க சென்றபோது சிலையை பார்த்தேன்”

# கச்சத்தீவு புத்தர் சிலை சர்ச்சை முழு விவரம்!





இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள சர்ச்சைக்குரிய தீவான கச்சதீவில் புத்தர் சிலை யொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாக பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சுமத்தி வருகின்றனர்.

எனினும், கச்சத் தீவில் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்படவில்லை என இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் கேப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவிக்கின் றார்.

புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதை கடற்படை நிராகரித்தாலும், கச்சதீவில் புத்தர் சிலை காணப்படும் வகையிலான புகைப்படங்கள் தற்போது சமூக ஊடகங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், மத நல்லிணக்கத்தின் எடுத்துக்காட் டாக விளங்கும் கச்சத்தீவில் புத்தர் சிலை அமைக்கும் சிங்கள கடற்படையினரின் போக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்தி புத்தர் சிலைகளை அகற்ற இந்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என இந்திய பக்தர்கள் மற்றும் இரு நாட்டு பங்குத் தந்தைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**“இரும்புத் தகடுகளைத் தேடிச் சென்றபோது கண்ணில் பட்ட புத்தர் சிலைகள்”**

இதுகுறித்து நெடுந்தீவு பங்குதந்தை வசந்தன் பேசுகையில், “இந்திய இலங்கை மக்களின் மத நல்லிணக்கத்திற்குச் சான்றாக உள்ள புனித அந்தோனியார் கோவில் மட்டுமே கச்சத்தீவில் இருந்து வந்த நிலையில் தற்போது இலங்கை கடற்படை வீரர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்டுள்ள கடற்படை தளத்திற்கு எதிரே



இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு விகாரை கட்டப்பட்டுள்ளதாக” கூறினார்.

மேலும், “இந்த விகாரை கடந்த 3 ஆண்டுகளுக்குள் கட்டப்பட்டதாக இருக்கலாம். இந்த ஆண்டு வருடாந்திர திருவிழா முடிந்த மறு நாள் நெடுந்தீவில் இருந்து திருவிழாவிற்காக எடுத்து வந்த இரும்புத் தகடுகள் சில வற்றைக் காணவில்லை. அதைத் தேடிச் சென்ற போது விகாரை இருப்பதை முதலில் நான் பார்த்து எனது செல்போனில் போட்டோ எடுத்துக்கொண டேன்.

கச்சத்தீவில் அரச மரம் இல்லாத நிலையில் இலங்கையில் இருந்து அரச மரக் கன்றுகள் கொண்டுவரப்பட்டு கச்சத்தீவில் வைத்து அரச மரத்தை வளர்த்து, அதற்குப் பிறகு தற்போது அங்கு 3 அடி உயரத்தில் சிலையுடன் கூடிய விகாரை மற்றும் 5 அடி உயரத்துடன் விகாரை என இரண்டு விகாரை கட்டப்பட்டுள்ளது,” என்று கூறினார் வசந்தன். கச்சத்தீவு புனித அந்தோனியார் கோவில் திரு விழாக்கு வரும் பங்குத் தந்தைகள் மற்றும் பக்தர்கள் யாரும் புத்தர் சிலையைப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக பனை ஓலைகளால் நான்கு புறமும் உயரமாக தடுப்புகள் வைத்து மறைக்கப்பட்டுள்ளதாக வசந்தன் கூறுகிறார்.

இந்த ஆண்டு திருவிழாவிற்குச் சென்ற இந்திய இலங்கை பங்குத் தந்தைகள் அந்தப் பகுதிக்குச் செல்ல இலங்கை கடற்படை வீரர்கள் அனுமதி மறுத்ததால் பங்குத் தந்தைகளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பெயரில் விசாரித்தபோது அங்கு புத்த விகாரை கட்டப்பட்டுள்ளது தெரிய வந்தது.

“கச்சத்தீவில் நிறுவப்பட்டுள்ள புத்த விகாரையால் மத நல்லிணக்கம் பாதிக்கப்பட்டு அனைத்து மதத்தினரும் தங்களின் சுவாமி சிலைகளை வைத்து வழிபடத் தொடங்கினால் கச்சத்தீவில் எதிர்வரும் காலங்களில் மத மோதல்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

தற்போது அமைந்துள்ள புத்தர் சிலையால் காலம் காலமாக இரு நாட்டு பக்தர்களும் வழிபடும் கச்சத்தீவு புனித அந்தோணியார் வரலாறு மறைக்கப்பட்டு, மாற்றப்பட வாய்ப்பு இருப்பதாக அச்சம் எழுந்துள்ளது.

கச்சத்தீவில் அமைந்துள்ள புத்த விகாரை யாரும் பார்க்காத அளவு உயரமான தட்டிகளைக் கொண்டு மறைத்து வைத்திருப்பது பல சந்தேகங்களை எழுப்புகிறது. இலங்கை கடற்படை உடனடியாக உண்மையை மக்கள் மத்தியில் தெரிவிக்கவேண்டும்,” என்று வசந்தன் தெரிவித்தார்.

அதோடு, “புத்த விகாரை அமைத்திருப்பது கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய பக்தர்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. உடனடியாக புத்த சிலைகள் கச்சத்தீவில் இருந்து அகற்றவேண்டும்,” என்று பங்குத் தந்தை வசந்தன் தெரிவித்தார்.

**இலங்கை நாடாளுமன்றத்தில் வெளியான தகவல்**

கச்சத்தீவில் புத்தர் சிலையொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாக தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றத்தில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

“கச்சத்தீவில் இவ்வளவு காலமாக அந்தோனியார் ஆலயம் மாத்திரம் காணப்பட்டது. தற்போது அங்கு மிகப் பெரியதொரு புத்தர் சிலை எப்படி வந்தது என்பது தான் கேள்வியாக இருக்கின்றது.

இன்று இலங்கையில் உள்ளவர்களுக்கும் தமிழ் நாட்டில் இருக்கின்றவர்களுக்கும், கச்சதீவு அந்தோனி யார் ஆலயத்திற்கு சொந்தமான இடம் என்று தெரியும். மீனவர்கள் அங்கு சென்று வருவது, வழிபடுவது வழமையான விடயம். ஆனால், வடக்கு கிழக்கு பகுதிகளில் அதிகளவான பௌத்த அடையாளங்களை நிறுவி வருகின்றது படைத்தரப்பு. கச்சத்தீவில் மிகப் பெரிய புத்தர் சிலையை கடற்படை நிறுவியுள்ளது. கச்சதீவையும் விட்டு வைக்காத ஒரு நிலையாக இருக்கின்றமையை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன்.

ஆனால், கேட்டால் சொல்வார்கள், கடற்படை வழிபடுவதற்காக அங்கு சிலை வைக்கப்பட்டதாக அரசாங்கத்திலிருந்து பதில் வரும். இதை உடனடியாக அகற்ற வேண்டும்,” என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகளவிலான பௌத்த அடையாளங்கள் உருவாக்கப்பட்டு வருவதாக தமிழர் தரப்பு தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையில் தமிழர் பண்பாட்டு, மரபியல் அடையாளமாகப் பேணப்பட்டு வரும் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை பௌத்த தாதுகோபுரத்தின் எச்சமாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அண்மையில் தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இதைக் குறிப்பிட்டிருந்தார்.

நீண்டதோர் யுத்தத்தின் நேரடி விளைவுகளை எதிர்கொண்டு, அதிலிருந்து மீண்டெழ முடியாது தவிக்கும் தமிழ் மக்களது இன, மத, மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் அடியோடு அழிக்கப்பட்டு அல்லது அந்த அடையாளங்களின் முக்கியத்துவமும் தொன்மமும் வலிந்து மறைக்கப்பட்டு அத்தகைய தொல்லிடங்களில் சிங்கள பௌத்த அடையாளங்களான விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் துறவி மடங்களையும் அமைக்கும் நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் மிக முனைப்போடு செயலுருப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, நிலாவரை, நாவற்குழி, மயிலிட்டி, மண்ணித்தலை, உருத்திரபுரம், கச்சதீவு, கன்னியா வெந்நீரூற்று என நீளும் இந்த ஆக்கிரமிப்புப் பட்டியல் தற்போது நெடுந்தீவின் வெடியரசன் கோட்டை வரை தனது ஆக்கிரமிப்பின் கால்களை ஆழப் பதித்துள்ளமை, இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களின் இயல்பு வாழ்வு குறித்த அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

பௌத்தம் என்பது ஒரு மத அடையாளமே அன்றி சிங்கள இனத்துக்கான அடையாளம் அல்ல என்பதை அடியோடு மறுத்து தமிழினத்தின் மீது கட்டமைக்கப்பட்ட பண்பாட்டுப் படுகொலையை நிகழ்த்துவதென்பது, இந்த நாட்டின் ஆட்சியாளருடைய தாராளவாதம் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவிக்கின்றார்.



# காலநிலை மாற்ற சவால்கள்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, பேசால்ட் போன்ற சிலிகேட் பாறைகள் பெரிய அளவில் நிலத்தில் பரப்பப்படும். பாறைகள் காலநிலையை சமப்படுத்தும் இயற்கையான செயல்படிமுறையை அப்படியே பிரதிபலிக்கும் இந்த செயல்முறையால் பெருங்கடல்களின் மேற்பரப்பில் பயோ கார்பனேட் வடிவில் கார்பன்-டை-ஒக்சைடு வாயு சிறைப்படும்.

இதன்படி, பெருங்கடல்களில் சிலிகேட் அல்லது கார்பனேட் பாறைகள் போன்ற அல்கலின் பொருட்களை சேர்த்து, கார்பன்-டை-ஒக்சைடை உறிஞ்சும் அதன் செயல்முறையை அதிகப்படுத்தப்படும்.

இதேபோல், ஓஷன் பெர்டிலைசேஷன் என்ற செயல்முறை மூலம் பெருங்கடல்களில் பைட்டோ பிளாங்டான் வளர்ச்சியைத் தூண்டுவதால் கார்பன் - டை- ஒக்சைடு அளவைக் கட்டுப்படுத்த முடியும்.

கார்பன்-டை-ஒக்சைடு நீக்கத்திற்கான இந்த வழிமுறைகளை பெரிய அளவில் பேசப்பட்டாலும், யதார்த்த சூழலில் இந்த புதுமையான செயல்முறைகள் ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றன.

மேலே குறிப்பிட்ட அனைத்து வழிமுறைகளும் இணைந்தால் கூட, ஆண்டுக்கு 20 லட்சம் டன் கார்பன்-டை-ஒக்சைடை மட்டுமே நீக்க முடியும் என்று ஆக்ஸ்போர்டு நெட் ஜீரோ அமைப்பின் செயல் இயக்குநர் ஸ்டீவ் ஸ்மித் கூறுகிறார்.

2022ஆம் ஆண்டு உலகளாவிய படிம எரிபொருள் மற்றும் சிமெண்ட் பயன்பாட்டால் உமிழப்பட்ட கரியமில வாயுக்களின் அளவில் வெறும் 0.005 சதவீதம் மட்டுமே.

மேற்கூறிய செயல்முறைகள் மூலம் கார்பன்-டை-ஒக்சைடு நீக்கத்தின் அளவு 2050-ம் ஆண்டு வாக்கில் 4 முதல் 6 மடங்கு அதிகரித்தால் மட்டுமே பாரிஸ் ஒப்பந்த இலக்கை எட்ட முடியும் என்று மதிப்பீடு கூறுகிறது.

# சவாலை ஏற்காத சஜித், அநுர சதிமுயற்சிகளில் ஈடுபட்டனர்!

## அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, மார்ச் 28

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, அந்த சவாலை அனுரகுமார திஸநாயக்கவோ அல்லது சஜித் பிரேமதாஸவோ ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்கள் வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து சர்வதேச நாணய நிதிய உதவியை தடுக்க முயன்றனர் என்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “ஒரு வருடத்திற்கு முன்பு, மக்கள் எரிபொருட்களுக்கு வரிசையில் காத்திருந்தனர். 7-8 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. எரிவாயு தீர்ந்துவிட்டது. நாங்கள் அவைகளை மறக்க மாட்டோம். நாங்கள் அதை நினைவில் வைத்திருக்கிறோம்.

ஆனால், இந்த ஒரு வருட காலப்பகுதியில் பொருளாதாரத்தை நிர்வகிப்பதன் மூலம் நாட்டை அந்த நிலையில் இருந்து விடுவித்து சரியான பாதையில் கொண்டு செல்ல முடிந்துள்ளது. அதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது.

சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வரும்போது, நாடு முழுவதும் உள்ள இடங்களுக்குச் சென்று போராட்டக்காரர்கள் போராட்டங்கள் நடத்துகின்றனர். அவர்கள் இந்த பொருளாதாரத்தை சிதைக்க விரும்புகிறார்கள்.

இன்று, ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர், பிள்ளைகளை பிணைக் கைதிகளாக பிடித்துக் கொள்கின்றனர். கொழும்பிலுள்ள பெரியாட்களின் பிள்ளைகள் வெளிநாட்டில் படிக்கின்றனர். அல்லது தனியார் பாடசாலைகளில் படிக்கின்றனர்.

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க, நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும். கடந்த ஆண்டு பெப்ரவரியில் அது இல்லாமல் போய்விட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எமது பிக்குவின் தலைவர் ஹிட்லராக மாறுங்கள் என்று கூறியதாக ஞாபகம். நீங்கள் ஹிட்லராக இருக்க வேண்டிய அவசியமில்லை, தேவையான முடிவுகளை எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் படிக்கின்றனர். அநுரகுமாரவின் மகன் மிஹின் லங்காவில் இருக்கிறார். மகிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பந்தம் செய்தார்.

இப்போது அவரின் மகன் வெளிநாட்டில் இருக்கிறார். அதைச் செய்துவிட்டு, கிராமத்து குழந்தைகளை தெருவில் இறக்கிவிட வேலை செய்கிறார். அதனை எதிர்கொள்ளக்கூடிய அரசாங்கம் இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கட்சி இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டது. நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது, அந்த சவாலை அநுரகுமார திஸாநாயக்கவோ அல்லது சஜித் பிரேமதாஸவோ ஏற்றுக்கொள்ளவில்லை. தினமும் பாராளுமன்றத்தில் கூச்சல் போடுகிறார்கள். இவர்கள் தூதுவர்களை சந்தித்து ஐ. எம். எவ் உதவியை கொடுக்க வேண்டாம் என்று கூறினர்.

ஆனால், எங்களிடம் அரசியல் இல்லாததால் அதை செய்ய முடியாது என்று அந்த தூதுவர்கள் கூறினர். அப்படியானால் கடுமையான நிபந்தனைகள் போடுங்கள் என்றனர்.

நிபந்தனைகளை அமைப்பது யார்? வேறு யாருக்காகவும் அல்ல, அந்த நாட்டு மக்களுக்காக. ரணில் விக்கிரமசிங்க நாட்டின் சவாலை ஏற்றுக்கொண்ட தலைவர் என்பதாலேயே அவர்களுக்கு நிபந்தனையின்றி உதவுகிறோம்.

ஒரு வருடத்துக்குள் அதைச் செய்தார். எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் இலக்கான 69 இலட்சத்துக்கு நாட்டைக் கொண்டு செல்வதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்”

# ஜனாதிபதித் தேர்தலில் பெரமுன தனித்தே களம்!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு




கொழும்பு, மார்ச் 27

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியமைத்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக வெளியான செய்தி அடிப்படையற்றது. ஜனாதிபதி தேர்தலில் தனித்து பொதுஜன பெரமுன தனித்து போட்டியிட வேண்டும் என கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்புகின்றனர் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளோம். அரசியல் கொள்கை ரீதியில் இரு தரப்புக்கும் இடையில் வேறுப்பாடுகள் காணப்படுகின்றன. பொதுஜன பெரமுன கொள்கை அடிப்படையில் செயல்படும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தடுக்க சிறீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகித்ததாக எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது அடிப்படையற்றது. நாளை தேர்தல் இடம்பெற்றாலும் போட்டியிட தயாராகவுள்ளோம். தேர்தலை விரைவாக நடத்துமாறு குறிப்பிடும் எதிர்க்கட்சிகள்தான் தேர்தலை ஏதாவதொரு வழியில் பிற்போடுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இழுபறிநிலையில் உள்ள தன் பின்னணியில் தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள் ளது. அரசமைப்பின் பிரகாரம் 2024 நவம்பர் மாதத்துக்கு பின்னரே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். ஆகவே, ஜனாதிபதி தேர்தல் குறித்து தற்போதே அவதானம் செலுத்துவது அவசியமற்றது.

பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியமைத்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக வெளியான செய்தி அடிப்படையற்றது. ஜனாதிபதி தேர்தலில் பெரமுன தனித்து போட்டியிட வேண்டும் என்றே பெரும்பாலான கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகள் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும் - என்றார்.

(ஐ)






# உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட வேண்டும்!

## பிள்ளையான் கட்சி வலியுறுத்து

மட்டக்களப்பு, மார்ச் 27

**காலம் தாழ்த்தாது உரிய வேளையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுவே எமது கட்சியின் நிலைப்பாடு இந்தநிலைப்பாட்டில் நாங்கள் மிக உறுதியாக இருக்கின்றோம். என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பொதுச் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் குறிப்பிட்டார்.**

தேர்தல் ஆணையகத்தில் நடைபெற்ற கட்சிச் செயலாளர்களுடனான கூட்டத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தல் மூலம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்பதற்கு அப்பால் ஜனநாயகத்தை இந்த நாட்டில் கேலி கூத்தாக மாற்றிவிடக்கூடாது. தொடர்ந்தும் தேர்தலை பிற்போடப்படுவதென்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயம் அல்ல

தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரும் அவரோடு இணைந்த தேர்தல் ஆணைக்குழுவும் மிகச் சிரமப்பட்டுக்கொண்டிருப் பதை நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள் அது மிகவும் மனவேதனைக்குரிய விடயமாக இருக்கின்றது

இங்கு குறிப்பிடப்பட்டது போன்று கடந்த காலங்களில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தவிர்க்கமுடியாத காரணங்களால் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆனால், இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிற்போடப்பட்டுக்கொண்டு செல்வதென்பது நிச்சயமாக ஜனநாயகத்திற்குரிய சாவு மணியாக பார்க்கப்படுகின்றது. ஆகவே, இங்கிருக்கின்ற 59 அரசியல் கட்சிகளில் ஒரிரு அரசியல் கட்சிகளைவிட அனைத்துக் அரசியல் கட்சிகளும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றன - என்றார். (ஐ-06)



# தம்பலகாமம் ஊர் பெயர் ஆய்வு நூல் அறிமுகம்!

திருகோணமலை, மார்ச் 27

தம்பலகாமம் கிராமத்தின் ஊர் பெயரை ஆய்வு செய்து எழுதப்பட்ட நூல் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

தம்பலகாமம் ஆதிகோண நாயகர் ஆலய மண்டபத்தில் கலாபூசணம் வேலாயுதம் தங்கராஜா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

திருகோணமலை பற்றுக்களில் ஒன்றான தம்பலகாமம் கிராமத்தின் பெயரை ஆய்வுக் குட்படுத்தி, ஊரின் பெயர் வரலாற்றை சான்றுபடுத்தி மருத்துவர் த. ஜீவராஜ் இந்த நூலை எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-04)



# திருமலை பத்திரகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழா ஆரம்பம்!

திருகோணமலை, மார்ச் 27

பிரசித்தி பெற்ற திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 5ஆம் திகதி காலை அம்பாள் சிம்ம வாகனத்தில் எழுந்தருளி திருகோணமலை சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறும்.

பெருந்திருவிழா நாட்களில் தினமும் காலை 5.30 மணிக்கு அபிஷேகம், காலை 7.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, 7.45 க்கு தம்பபூஜை, 8.30 மணிக்கு வசந்த மண்டபபூஜை, 10.00 மணிக்கு திருவிழா நடைபெறும், பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம், 3.30 மணிக்கு மூலஸ்தான பூஜை, மாலை 4.15 மணிக்கு தம்பபூஜை, மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை, 6.00 மணிக்கு திருவிழா 7.30 மணிக்கு நிறைவு பெறும்.

திருவிழாக்காலங்களில் பகல் திருவிழா முடிந்தவுடன் மகேஸ்வர பூசை நடைபெறும். (ஐ-04)

# மண்முனைப்பற்று பிரதேசத்தில் 9,300 குடும்பங்களுக்கு அரிசி!

மட்டக்களப்பு, மார்ச் 27

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் 9ஆயிரத்து 300 குடும்பங்களுக்கு, தலா 10 கிலோ வீதம் இரண்டு மாதங்களுக்கு அரிசி வழங்கப்படவுள்ளது.

அரிசி வழங்கும் வேலைத் திட்டம் முதற்கட்டமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கிரான்குளம் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் அரிசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ். புவனேந்திரன மண்முனைப் பற்று பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜெயச்சந்திரன்,சமுர்த்தி வலய முகாமையாளர் சம்சுதீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# ரயிலை மறித்து போராட்டம்

மட்டக்களப்பு, மார்ச் 27

கொக்குவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திராய்மடு, சுவிஸ்கிராமம் பகுதியில் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற ரயிலை மறித்து பொதுமக்கள் மேற்கொண்ட போராட்டத்தால் சுமார் இரண்டு மணி நேர தாமதத்தின் பின்னர் ரயில் அங்கிருந்து சென்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் சுவிஸ் கிராமத்துக்கு செல்லும் பிரதான வீதியை ரயில் கடவையை கடக்கும் வீதி பகுதியை ரயில் நிலைய ஊழியர்கள் அகற்றும் செயல்பாடுகளை முன்னெடுத்த நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் குறித்த பிரதேச மக்கள் அந்த வீதியில் பெரும் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது ரயில் கடவையை மறித்து பொதுமக்கள் போராட்டம் முன்னெடுத்ததால் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த ரயில் மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு செல்லமுடியாதவாறு தடுக்கப்பட்டது.

பெருமளவான பொதுமக்கள் வீதியை மறித்து முன்னெடுத்த போராட்டம் காரணமாக குறித்த பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டதுடன் அப்பகுதிக்கு வந்த கொக்குவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொதுமக்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்தார்.



எனினும், அகற்றப்பட்ட வீதியை மீளப் புனரமைத்துத் தரும் வரைக்கும் தாங்கள் இப் பகுதியை விட்டுச் செல்வதில்லை எனவும் குறித்த வீதியை நிரந்தரமாக நிர்மாணித்து தரும் வரையில் தமது போராட்டம் தொடரும் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

குறித்த வீதியூடாக மிகவும் குறைந்த நேரத்தில் மட்டக்களப்பு நகருக்குச் செல்லமுடியும் என்பதுடன் இந்த வீதி இல்லாவிட்டால் நீண்டதூரம் பயணிக்கவேண்டிய சூழ்நிலை யேற்படும் எனவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இதன்போது பொதுமக்களிடமும் ரயில் நிலைய அதிகாரிகளிடமும் பேச்சு நடத்திய கொக்குவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த வீதியை மீண்டும் பாவனைக்கு விடும் வகையில் தற்காலிகமாக புனரமைப்பு செய்வதாக உறுதியளித்தார்.

எனினும் அதனை புனரமைப்பு செய்த பின்னரே தாங்கள் கலைந்துசெல்வோம் என பொதுமக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்த நிலையில் அகற்றப்பட்ட பகுதியை மீண்டும் ரயில் நிலைய வேலைப்பகுதி ஊழியர்கள் புனரமைத்ததை தொடர்ந்து மீண்டும் ரயில் செல்வதற்கு பொதுமக்கள் அனுமதியளித்தனர்.

எனினும் குறித்த பகுதியை நிரந்தரமாக புனரமைத்துதரா விட்டால் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என பொதுமக்கள் தெரிவித்தனர். (அ)

# சுவாமி விபுலானந்தரின் 131ஆவது ஜனன தின விழா!

காரைதீவு, மார்ச் 27

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றமும் அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியமும் இணைந்து நடத்தும் சுவாமி விபுலானந்தரின் 131ஆவது ஜனனதின விழா இன்று திங்கட்கிழமை அவர் பிறந்த காரைதீவு மண்ணில் நடைபெறவுள்ளது.

இதில், முதன்மை அதிதியாக இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். நினைவுப்பேருரையை தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கி. இரகுவரன் நிகழ்த்தவுள்ளார்.

காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் பணிமன்றத்தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு திருமுன்னிலை அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொதுமுகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் கலந்து ஆசி வழங்குவார். (ஐ)

# பெண்ணின் சடலம் வாவியிலிருந்து மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 27

மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு அருகிலுள்ள வாவியில் பெண்ணொருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வாவியில் சடலம் மிதப்பதைக் கண்டு பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து. சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை. மீட்கப்பட்ட சடலம் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (ஐ)

# சிறப்பு தள்ளுபடி விற்பனைக்கு பிரான்ஸில் கடும் கட்டுப்பாடு!

பாரிஸ், மார்ச் 27

”ஒன்று எடுத்தால் இரண்டு இலவசம்” என்று கூறி சில பொருள்களை தேவைக்கு அதிகமாக நுகர்வோரின் தலையில் கட்டிவிடும் வியாபாரத் தந்திரங்களுக்கு பிரான்ஸில் கட்டுப்பாடு வருகிறது.

பெரிய பல்பொருள் அங்காடிகளில் ‘சுப்பர் புரோமோசன் 70வீதம்’, ‘1+1 = 3 உருப்படிகள்” என்று குறிப்பிட்டு சலவை இயத்திரச் சவர்க்காரங்கள் முதல் பற்பசைகள், சம்போக்கள் வரை பல்வேறு பொருள்கள் அமோகமாக விற்பனை செய்யப்படுகின்றன. வாடிக்கையாளர்களை வியப்பில் அதிர்ச்சியடைய செய்து தங்கள் வருமானத்தையும் தேவையையும் மீறிய நுகர்வுக்குத் தூண்டும் விதமான இந்தச் சலுகை வியாபார தந்திர முறையை குறைக்கின்ற சட்டமூலம் ஒன்று பிரான்ஸின் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இனிமேல் கடைகளில் சுகாதாரம் - அழகு, வாசனைத் திரவியங்கள், சுத்திகரிப்பு - பராமரிப்புச் சார்ந்த பொருள்களை அள்ளுகொள்ளையாக விற்பனை செய்வது 34 வீதமாக குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பெரும் எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியிருக்கிறது. ஆயினும், புதிய சட்டம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்தே நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அணு ஆயுதங்களை ரஷ்யா பெலாராஸில் நிலைநிறுத்தும்!

## ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவிப்பு



மொஸ்கோ, மார்ச் 27

பெலாரஸ் நாட்டில் தந்திரோபாய அணு ஆயுதங்களை ரஷ்யா நிலைநிறுத்தும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தங்களை மீறாது என்று கூறிய அவர், இதை அமெரிக்கா தனது ஆயுதங்களை ஐரோப்பாவில் நிலைநிறுத்துவதற்கு ஒப்பானது என்றும் கூறினாரென ரஷ்ய அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும், ரஷ்யா அணு ஆயுதங்களை பயன்படுத்த தயாராகி வருகிறது என்று நம்பவில்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தனது மேற்கத்தைய நட்பு நாடுகளிடம் அதிக இராணுவ ஆதரவு தருமாறு கோரிய நிலையிலேயே ரஷ்யா இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்த வார ஆரம்பத்தில் 18 நாடுகள் அடுத்த ஆண்டில் குறைந்தபட்சம் 10 இலட்சம் பீரங்கி குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# செயற்கை சுனாமியை ஏற்படுத்தும் ஆயுதம் வெற்றிகரமாக பரிசோதனை!

## வடகொரியா அறிவிப்பு



பியோங்யாங், மார்ச் 27

செயற்கை சுனாமியை உருவாக்கக்கூடிய ஆயுதத்தை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது.

வட கொரியா, தென் கொரியா இடையே நீண்டகாலமாக முரண்பாடு நிலவி வருகிறது. இந்த விவகாரத்தில் அமெரிக்கா தென்கொரியாவுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், அண்மையில் இரு நாடுகளும் கூட்டுப் பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளன.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாகவே வடகொரியா கடலுக்கு அடியில் புதிய அணு ஆயுதத்தை சோதித்துள்ளது. நாட்டின் தென் பகுதியில் உள்ள ஹம்க்யோங் மாகாணத்தில் கடலுக்கு அடியில் ஆயுத சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது.

மேலும், ”கடலுக்கு அடியில் செலுத்தப்பட்ட ஆயுதம் 80 முதல் 150 மீற்றர் ஆழத்தில் சுமார் 60 மணி நேரம் பயணம் செய்து பின்னர் வெடித்து சிதறியது. இதன் மூலம் செயற்கை சுனாமியை ஏற்படுத்தினோம். தலைவர் கிம் ஜோங் உன்னின் மேற்பார்வையில் இந்த சோதனை நடந்தது”, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனையால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது. வடகொரியாவின் இந்த சோதனைக்கு தென்கொரியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

# 5 படகுகள் கவிழ்ந்ததில் 7 பேர் பலி; 67 பேர் மாயம்!

ரியூனிஸ், மார்ச் 27

கடந்த இரு நாட்களில் ஆபிரிக்காவிலிருந்து இத்தாலி செல்ல முயன்ற 5 படகுகள் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகின. இதில் 7 பேர் உயிரிழந்தனர். 67 பேர் காணாமல் போயினர்.

இதனிடையே, நேற்று முன்தினம் ஆபிரிக்க நாடான துனீசியாவில் இருந்து இத்தாலிக்கு புறப்பட்ட அகதிகள் படகு துனீசியா கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் குழந்தைகள் உள்பட 34 பேர் மாயமாகினர்.

இவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. துனீசியாவில் கடந்த 3 நாட்களில் நடந்த 5ஆவது அகதிகள் படகு விபத்து இதுவாகும். இந்த விபத்துகளில் மொத்தம் 7 பேர் உயிரிழந்தனர். 67 பேர் மாயமாகினர்.

ஆபிரிக்க நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் போர் மற்றும் பொருளாதார நெருக்கடியால் ஏராளமானோர் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 36 செயற்கை கோள்களை நேற்று ஏவியது இஸ்ரோ!



ஸ்ரீஹரிகோட்டா, மார்ச் 27

சுமார் 5,805 கிலோ எடை கொண்ட 36 செயற்கைக் கோள்களுடன் விண்ணில் வெற்றிகரமாக ஏவப்பட்டது இஸ்ரோவின் ஜி. எஸ். எல். வி. மார்க்-3 ஏவூர்தி. வணிக நோக்கில் இந்த ஏவூர்தி விண்ணில் ஏவப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் “ஒன்வெப்“ நிறுவனத்துக்கு சொந்தமான செயற்கைக் கோள்களை இந்த ஏவூர்தி சுமந்து சென்றது.

அதன்படி, இங்கிலாந்தை சேர்ந்த ஒன்வெப் நிறுவனத்தின் 72 செயற்கைக் கோள்களை ஜி. எஸ். எல். வி. மூலம் விண்ணில் செலுத்த, இஸ்ரோவின் என். எஸ். ஐ. எல். நிறுவனம் கடந்த ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. முதல்கட்டமாக, ஜிஎஸ்எல்வி மார்க்-3 ஏவூர்தி மூலம் 36 செயற்கைக் கோள்கள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 23ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.

இந்நிலையில், 2ஆவது கட்டமாக ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஆய்வு மையத்தின் 2ஆவது ஏவுதளத்தில் இருந்து ஜி. எஸ். எல். வி. மார்க்-3 ஏவூர்தி மூலம் 36 செயற்கைக் கோள்கள் நேற்று விண்ணில் ஏவப்பட்டன. (ஐ)

# அமெரிக்காவில் பனிப்பொழிவு: 26 பேர் உயிரிழப்பு; பலர் மாயம்!



மிசிசிப்பி, மார்ச் 27

அமெரிக்காவின் கலிபோர்னியா, மிசிசிப்பி மாகாணங்களில் வீசிய பனிப்புபயலால் 26 பேர் உயிரிழந்தனர்.

பனிப் புயலால் கலிபோர்னியா முழுவதும் பனி மூடப்பட்டிருந்தது. இதனால், வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் முழுவதும் பனியால் மூடப்பட்டன. இதனால் நகரின் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மிசிமிசிப்பி மாகாணத்தில் புயலுடன் கூடிய கனமழை பெய்யும் என அமெரிக்காவின் வானிலை ஆய்வு மையம் சமீபத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஏராளமான மின்கம்பங்கள் சரிந்து விழுந்ததால் அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. எனவே பல நகரங்கள் இருளில் மூழ்கின. மேலும் பல இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்து போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

இரு மாகாணங்களிலும் வீசிய பனிப் புயலால் 26 பேர் உயிரிழந்தனர். பலர் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று மாகாண அரசுகள் தெரிவித்துள்ளன. (ஐ)

# நியூசிலாந்து அணியிடம் இலங்கை படுதோல்வி!

ஒக்லாந்து, மார்ச் 27

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 198 ஓட்டங்களால் இலங்கை படுதோல்வி அடைந்தது.

இந்தத் தோல்வியால் ஐ. சி. சி. கிரிக்கெட் உலகக் கிண்ண சுப்பர் லீக் தொடரில் அவசியமான 10 புள்ளிகளை இலங்கை இழந்தது. இதனால், உலகக் கிண்ணப் போட்டியில் நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் கேன் வில்லியம்சன், ரிம் சௌதி, டெவன் கொன்வே, மைக்கல் பிரஸ்வெல் போன்ற முக்கிய வீரர்கள் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 49.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 274 ஓட்டங்களை குவித்தது. 30ஆவது ஓவரில் 5ஆவது விக்கெட்டை இழந்தபோது நியூசிலாந்தின் மொத்த எண்ணிக்கை 152 ஓட்டங்களாக இருந்தது.

எனினும் கிளென் பிலிப்ஸ், அறிமுக வீரர் ரச்சின் ரவீந்திர ஆகிய இருவரும் 6ஆவது விக்கெட்டுக்காக 64 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். பின்வரிசை வீரர்கள் சொதப்பியபோதும் 50 ஓவர்கள் நிறைவில் 274 ஓட்டங்களை குவித்தது.

இதில், பின் அலன் 51 ஓட்டங்கள், ரச்சின் ரவிந்த்ர 49, டெரில் மிற்செல் 47, கிளென் பிலிப்ஸ் 39, வில் யங் 26 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் சாமிக கருணாரட்ன 4 விக்கெட்களையும் கசுன் ராஜித, லஹிரு குமார தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

275 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வி அடைந்தது.


அஞ்சலோ மத்தியூஸ் 18 ஓட்டங்கள், சாமிக கருணாரட்ன 11 ஓட்டங்கள், லஹிரு




குமார 10 ஓட்டங்கள் ஆகியோரே இரு வரிசை ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூசிலாந்து பந்துவீச்சில் ஹென்றி ஷிப்லி 5 விக்கெட்களையும் டெரில் மிற்செல், ப்ளயார் டிக்னர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

தனது 4ஆவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடிய ஹென்றி ஷிப்லி தனது அதிசிறந்த பந்துவீச்சுப் பெறுதியைப் பதிவு செய்து ஆட்டநாயகன் விருதை வென்றெடுத்தார். (ஐ)



# பவலின் அதிரடி ஆட்டம் மேற்கிந்தியா வெற்றி!

கேப்டவுன், மார்ச் 27

பவலின் அதிரடித் துடுப்பாட்டத்தால் தென்னாபிரிக்கா அணியை 3 விக்கெட்களால் வெற்றி கொண்டது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு 2-0 என டெஸ்ட் தொடரை இழந்தது. 1-1 என ஒருநாள் தொடர் சமன் செய்தது. இதையடுத்து இந்த இரு அணிகள் இடையிலான இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது இருபது - 20 போட்டியில் மழை காரணமாக ஆட்டம் 11 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இந்த ஆட்டத்தில் முதலாவதாக துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்கா அணி 11 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 131 ஓட்டங்களை குவித்தது. அந்த அணியில் அதிகபட்சமாக டேவிட் மில்லர் 22 பந்துகளில் 48 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 132 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி களம் புகுந்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களம் புகுந்த பிரண்டன் கிங் 8 பந்தில் 23 ஓட்டங்களும், கைல் மேயர்ஸ் 6 ஓட்டங்களிலும் வீழ்ந்தனர். இதையடுத்து களம் இறங்கிய சார்லஸ் 28 ஓட்டங்கள், ஓட்டங்க எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் அந்த அணி 10.3 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 132 ஓட்டங்ககள் எடுத்து வெற்றி பெற்றது. அந்த அணியின் வெற்றிக்கு கப்டன் பவல் பக்க பலமாக இருந்தார். அவர் 18 பந்தில் 5 சிக்ஸருடன் 43 ஓட்டங்கள் குவித்து அசத்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் 1-0 என மேற்கிந்தியத் தீவுகள் முன்னிலையில் உள்ளது. (ஐ)

# நான் தெரிவாளராக இருந்தால் ஷுப்மனையே தெரிவு செய்வேன்!

டில்லி, மார்ச் 27

இந்திய அணித் தெரிவாளராக நான் இருந்தால் ஒருநாள் அணியில் என்னைவிட ஷுப்மன் கில்லை தான் தெரிவுசெய்வேன் என இந்திய அணி வீரர் ஷிகர் தவான் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் அணியில் தவானுக்கு மாற்றாக கில் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் மற்றும் இருபது - 20 வடிவங்களில் தனக்கான இடத்தை அனுபவ வீரர் ஷிகர் தவான் கிட்டத்தட்ட இழந்துவிட்டார். இந்நிலையில், ஷுப்மன் கில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றார்.




இந்த நிலையில் அணியின் தெரிவாளர்கள், பயிற்நர் மற்றும் அணித்தலைவர் ஆகியோர் கில்லை தெரிவு செய்தது நியாயமான முடிவுதான் என தவான் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், 'இந்திய அணியின் தேர்வாளராக நீங்கள் இருந்தால் கில் அல்லது தவானில் யாரை தேர்வு செய்வீர்கள்' என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது.

"நான் என்ன நினைக்கிறேன் என்றால் கில், டெஸ்ட் மற்றும் இருபது - 20 வடிவத்தில் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருகிறார். அதனால் நான் தேர்வாளராக இருந்தால் அவருக்கு சர்வதேச போட்டிகளில் அனைத்து வடிவங்களிலும் தொடர் வாய்ப்பு வழங்கவே விரும்புவேன். அதற்கான முழுத் தகுதியுடன் அவர் உள்ளார்", என்றார். (ஐ)

# பிரேஸில் அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது மொரோக்கோ!

டேன்ஜர், மார்ச் 27

உதைபந்தாட்ட உலகின் முன்னிலை வகிக்கும் பிரேஸில் அணிக்கு அதிர்ச்சி கொடுத்து முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது ஆபிரிக்க அணியான மொராக்கோ. நட்பு ரீதியிலான இந்தப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் மொராக்கோ வெற்றி பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உதைபந்தாட்ட உலகக் கிண்ண தொடரின் அரையிறுதிப் போட்டியில்பிரான்ஸ்அணியுடன்மொராக்கோ விளையாடியது. இந்நிலையில், பிரேசில் அணிக்கு எதிரான நட்பு ரீதியிலான போட்டியில் அந்த அணி வெற்றி பெற்றுள்ளது.

மொராக்கோவின் டேன்ஜர் நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 29ஆவது நிமிடத்தில் முதல் கோலை மொராக்கோ வீரர் சோபியானே பாவ்பெல் பதிவு செய்தார். இதற்கு பதிலடியாக பிரேஸிலின் கஸ்மிரோ 67ஆவது நிமிடத்தில் பதிவு செய்தார். இருந்தும் அடுத்த



12 நிமிடங்களில் மொராக்கோ வீரர் அப்துல்ஹமீத் சபிரி மற்றொரு கோலை பதிவு செய்தார். இவர் மேலதிக வீரராக களம் கண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பலனாக ஆட்ட நேர முடிவில் 2-1 என்ற கோல் கணக்கில் மொராக்கோ வெற்றி பெற்றது. (ஐ)

# 100-150 பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடு தளரும்!

கொழும்பு, மார்ச் 27

**அடுத்த நான்கு மாதங்களில் 100 முதல் 150 பொருள்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசு நீக்கும், இந்த நடவடிக்கை மாற்று விகிதங்கள், அந்நிய கையிருப்பு மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்று திறைசேரியின் மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.**

வாகன இறக்குமதியால் ஆண்டுக்கு குறைந்தது இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களை இறக்குமதி செய்வதால், இது வெளிநாட்டு கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், வாகன இறக்குமதி கட்டுப்பாடு தொடரும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கணினிகள், கைபேசிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், எழுதுபொருட்கள், உணவுப் பொருட்கள், ஆடைப் பொருட்கள் மற்றும் ஆடைகள், தோல் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், உதிரி பாகங்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், விவசாய உபகரணங்கள், குளியலறை பொருத்துதல்கள் மற்றும் பீங்கான் உள்ளிட்ட மின்னணு உபகரணங்கள் ரைல்ஸ் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்படும் பொருட்களில் அடங்கும்.

மத்திய வங்கி, கைத்தொழில் அமைச்சு மற்றும் திறைசேரி என்பன கட்டுப்பாடுகள் நீக்கப்படும் பொருட்களின் அளவை தீர்மானிக்கும் என்று திறைசேரி அதிகாரிகள் தெரிவித்தனர். பொருள்களுக்கு கறுப்புச் சந்தை இல்லை என்பதை உறுதி செய்வதே இதன் நோக்கம் என்று அதிகாரி ஒரு வர் கூறினார்.

"இருப்பினும், வசதி சுரண்டப்படாமல் இருப்பதையும், இறக்குமதிகள் தேவையான அளவை விட அதிகமாக இல்லை என்பதையும் உறுதிசெய்ய கடுமையான கண்காணிப்பு பொறிமுறை இருக்கும். தேவை ஏற்பட்டால், கட்டுப்பாடுகள் மீண்டும் விதிக்கப்படலாம்", என்றும் அவர் மேலும் கூறினார்.

சர்வதேச நாணய நிதியம் இந்த வாரம் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கு ஒப்புதல் அளித்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் வாகனங்கள் உட்பட சுமார் ஆயிரத்து 500 பொருட்களை இறக்குமதி செய்ய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வாகன இறக்குமதி தடை அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# சித்திரை புத்தாண்டு காலத்தில் பொருள்களின் விலை குறையும்

## வர்த்தக அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதால் தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தை முன்னிட்டு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பிற இறக்குமதி பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக கடந்த சில தினங்களாக மேலும் அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டன. இதன் பலன் நேரடியாக நுகர்வோருக்குச் செல்லும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

உருளைக்கிழங்கு, வெங்காயம், சீனி, பருப்பு மற்றும் மிளகாய் போன்ற நுகர்வோர் பொருட்கள் நேரடியாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. டொலர் மூலம் பரிவர்த்தனை செய்து இறக்குமதி செய்யப்படும் மற்ற அனைத்து முக்கிய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் விரைவில் குறையும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

வடமராட்சி, மார்ச் 26

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீசாலைப் பகுதியில் முச்சக்கர வண்டியில் சூட்சுமமான முறையில் கஞ்சா கடத்திய நபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஓட்டோ ஒன்றில் கஞ்சா கடத்தப்படுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், ஓட்டோவில் இருந்த இசைக் கருவியில் மறைத்து எடுத்து செல்லப்பட்ட ஒரு கிலோ 800 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது.

இதன்போது மீசாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளைஞன் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர். (அ)

# 99 வீத கைபேசி விற்பனையகங்கள் வர்த்தக உரிமங்கள் பெறவில்லை!

கொழும்பு, மார்ச் 27

கைபேசி உள்ளிட்ட தொலைத்தொடர்பு உபகரணங்களை விற்பனை செய்யும் 99 வீதமான விற்பனையகங்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம் இருந்து வர்த்தக உரிமம் பெறவில்லை என தெரியவந்துள்ளது.

கைபேசி உள்ளிட்ட தொலைத்தொடர்பு உபகரணங் களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் போது தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம் இருந்து வர்த்தக உரிமம் பெற வேண்டும்.

வர்த்தக அனுமதிப்பத்திரம் இன்றி யாராவது தொலைத்தொடர்பு உபகரணங்களை விற்பனை செய்தால், அது தொடர்பில் விசாரணை நடத்துவது தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என்றும் அதன் பணிப்பாளர் (இணக்கம் மற்றும் விசாரணைகள்) தெரிவித்துள்ளார்.

தொலைத்தொடர்பு சட்டத்தை மீறி சாதனங்கள் விற்கப்பட்டால், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் பொலிஸில் முறைப்பாடு செய்து, பொலிஸார் மூலம் சோதனை நடத்த வேண்டும். ஆணையத்தின் விசாரணைக்குப் பிறகு உரிமம் இல்லாமல் தொலைத்தொடர்பு கருவிகளை விற்பனை செய்யும் கடைகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியல் தொடர்பான முறைப்பாடுகள் அந்தந்தபொலிஸ் நிலையத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# மதுபோதையில் வாகனம் செலுத்தினால் இனி பொலிஸ் பிணை வழங்கப்படாது!

கொழும்பு, மார்ச் 27

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக பொலிஸ் பிணை இல்லாத வழக்குகளை தாக்கல் செய்யுமாறு போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பொலிஸ் நிலையங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பொலிஸ் தலைமையக கட்டளைத் தளபதிகள், நிலையத் தளபதிகள் மற்றும் போக்குவரத்து திணைக்கள கட்டளைத் தளபதிகளை அழைத்து வாய்மொழியாக அறிவுறுத்தல்களை வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்த பிறகு, அவர்கள் இரண்டு முறைகளில் விசாரணைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். அதன் பின்னர் அந்த சாரதிகளை பொலிஸ் பிணையில் விடுவிக்க பொலிஸ் தலைமையகம் மற்றும் நிலையத் தளபதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், குறித்த வாகனத்தை வேறொரு நபருக்கு விடுவிப்பதற்கான திறன் பொலிஸாருக்கு இருந்தது. எவ்வாறாயினும், விபத்துக்களை குறைக்கும் வகையில், மதுபோதையில் வாகனம் ஓட்டுவதை நிறுத்துமாறும், அவ்வாறு கைது செய்யப்படும் சாரதிகளை பொலிஸ் பிணை வழங்காமல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

# வெட்டிய இரு கைகளும் கடலில் வீசப்பட்டதாம்!

## சந்தேகநபர் வாக்குமூலம்

கொழும்பு, மார்ச் 27

மொறட்டுவையில் அண்மையில் நபர் ஒருவரின் இரு கைகள் துண்டாடப்பட்டன. அந்தக் கைகளை சந்தேகநபர் கடலில் வீசிவிட்டார் என்று சந்தேகநபர் கூறினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, மொறட்டுவை - எகொடஉயன கடற்பரப்பில் உள்ள பாறைகளுக்கிடையில் நேற்று வாள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக கல்கிசை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த வாள் அண்மையில் மொறட்டுவையில் நபர் ஒருவரின் கைகளை வெட்டப் பயன்படுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைகளை வெட்டிய சந்தேகநபரை பாதுகாத்தார் என்ற குற்றச்சாட்டில் 33 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஹோமாகமவில் மர்மநபர்கள் துப்பாக்கிச் சூட்டு தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 27

கொழும்பு - ஹோமாகம - மாபுல்கொடை பிரதேசத்தில் வாகனம் பழுது பார்க்குமிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்து, முச்சக்கர வண்டி மீது ரி -56 ரக துப்பாக்கியால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இரு வாகனங்கள் சேதமடைந்தன.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதன் காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சிறுவன்!

## கைதாகி எச்சரிக்கையின் பின் விடுதலை

கொழும்பு, மார்ச் 27

கட்டுநாயக்காவின் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு போலி வெடிகுண்டு மிரட்டல் விடுத்த 14 வயது சிறுவன் கைதாகி கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

பாடசாலை மாணவனான சிறுவன் நேற்று முன்தினம் விமான நிலையத்தின் அவசர அழைப்புப் பிரிவுக்கு அழைப்பு விடுத்து விமான நிலையத்தில் வெடிகுண்டு இருப்பதாகக் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய, முனையத்தை அதிகாரிகள் சோதனை செய்தனர். சில நிமிடங்களில் மாணவர் மீண்டும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வெடிகுண்டு அச்சுறுத்தல் இல்லை என்றும் அது நகைச்சுவை என்றும் தெரிவித்தார் பொலிஸார் கூறுகின்றனர்.

களுபோவில பிரதேசத்தில் வசித்துவரும் சந்தேகநபரான மாணவனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, பின்விளைவுகளை உணராமல் மேற்கொள்ளப்பட்ட அழைப்பு குறித்து பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில், தான் செய்த செயலின் தீவிரம் தனக்கு தெரியவில்லை என சிறுவன் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்ததையடுத்து, கடுமையாக எச்சரிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காங்கேசன்துறை - காரைக்கால் படகு சேவை ஏப்ரல் 29 ஆரம்பம்!

## அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா

கொழும்பு, மார்ச் 27

இந்தியாவின் புதுச்சேரியில் உள்ள காரைக்கால் துறைமுகத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான படகுச் சேவை எதிர்வரும் ஏப்ரல் 29 முதல் ஆரம்ப மாகும் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

காரைக்கால் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு குறித்த தினத்தில் புதிய படகு சேவையின் முதல் படகு வருகைதரும் என்றார்.

அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற இந்த புதிய படகுச் சேவையின் பங்குதாரர்களுடனான கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

படகுச் சேவை உரிமையாளர்களின் கூற்றுப்படி, ஒரு பயணத்துக்கு பயணி ஒருவரிடமிருந்து 50 அமெரிக்க டொலர் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 16 ஆயிரம் ரூபாய்) அறவிடப்படுவதுடன், 100 கிலோகிராம் பொருட்களை கொண்டுவர அனுமதிக்கப்படும். ஒரு படகு ஒரே தடவைகளில் 150 பயணிகளை ஏற்றிச் செல்லும். காரைக்கால் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு, 4 மணிநேரத்தில் காங் கேசன துறையை வந்தடையும். முதல் கட்ட நடவடிக்கைகளின்போது பகல் நேரங்களில் மட்டுமே சேவை முன்னெடுக்கப்படும். காங்கேசன்துறை துறை முகத்தின் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என்றும் அமைச் சர் கூறினார்.

இந்த கட்டுமானங்களுக்கு தற்போது இந்தியாவால் வழங்கப்படும் கடன் மானிய வசதி போதுமானதாக இல்லாததால், இந்தியாவிடம் மேலதிகமாக 16 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் வசதி கோரப்பட்டுள்ளது" என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

### சைவ மக்களின்...

குறித்து ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலயத் திருப்பணி நடைபெறுவதற்கு இந்து கலாசாரத் திணைக்களம் உரிய அனுமதிகளை வழங்க வேண்டும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். தொடர்ந்து சைவ சமயத்துக்கு வரும் இன்னல்களை போக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ-03)

### குற்றங்களை...

அரிசிப் பொதி வழங்கும் மாவட்ட மட்ட நிகழ்வு நேற்று நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்து அரிசியாக மாற்றி அதை மக்களுக்கு கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 45 ஆயிரம் ஹெக்ரெயர் வயல் நிலங்கள் உள்ளன. 300 ஹெக்ரெயர் நெல்லையேனும் கொள்வனவு செய்யலாம் என்று எதிர்பார்த்தோம். ஆனால், 25 ஹெக்ரெயர் நெல்லைக்கூட கொள்வனவு செய்ய முடியவில்லை.

நாட்டில் இருக்கின்ற தேசிய பத்திரிகைகள் எதனை எடுத்தாலும் யாழ். மாவட்டத்தின் குற்றச்செயல்கள் பற்றிய செய்திகள்தான் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

நீங்கள் உங்களுடைய பிள்ளைகளில் கவனம் செலுத்தவில்லை என்றால் உங்களுடைய குடும்பம் மட்டுமல்ல, உங்களுடைய கிராமம் மட்டுமல்ல, இந்த நாடும் சீரழிந்து போகின்ற நிலைமை ஏற்படும்.

நாங்கள் பொலிஸ் மற்றும் ஏனைய படைப் பிரிவினரோடு கலந்துரையாடியுள்ளோம். ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் குற்றச் செயல்களை எவ்வாறு தடுப்பது, இதில் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஈடுபடுபவர்களை எவ்வாறு இனம் கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பான வேலைத்திட்டம் இப்போது மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறான நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வருமானால் இயல்பாகவே எங்களுடைய கிராமங்களிலே - எங்களுடைய நகரங்களிலே குற்றச்செயல்கள் குறைவடையும். இந்த மாவட்டத்தினுடைய கௌரவம் காப்பாற்றப்படும் - என்றார். (ஐ)

### தமிழர்...

மயமாக்கல் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், "தமிழரின் மத, பண் பாட்டு, கலாசார அடையாளங்களை அழிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை. தமிழரின் மத, பண்பாட்டு, கலாசார அடையாளங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வைத்துள்ள கருத்துக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சு அதிக கவனம் செலுத்தும்" - என்றார். (ஐ)

### வெடுக்குநாறி...

நேற்றைய தினம் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு பூசைக்காக சென்ற பூசகரும் அந்தக் கிராமத்தின் மக்களும் ஆலயத்தில் இருந்த விக்கிரகங்கள் காணாமல் போனதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த னர். இதைத் தொடர்ந்து அவர்கள் நடத்திய தேடுதலிலேயே ஆதிலிங்கம் பெயர்த்து வீசப்பட்டமை தெரிய வந்தது. இதைத் தொடர்ந்தே இந்த விடயம் வெளி வந்தது. இனந்தெரியாத நபர்களே இந்த அடாத்தான செயலில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது.

இதேநேரம், தமிழர்களின் ஆதி தொட்டு வழிபட்டுவந்த வெடுக்குநாறி மலை பௌத்த தொல்லியல் இடம் என்று கூறி தொல்பொருள் திணைக்களம் அந்த இடத்தை சுவீகரித்தது. ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாட்டை நிறுத்த பல தடைகள் ஏற்படுத்தப்பட்டு, பூசை வழிபாட்டுக்கும் தடை விதிக்கப்பட்டது.

இதனிடையே, தடையை மீறி பூசைகளை முன்னெடுக்க முயன்ற ஆதிசிவன் ஆலய நிர்வாகம் மீது தொல்பொருள் திணைக்களத்தினர் வழக்கு தொடர்ந்திருந்தனர். தொல்பொருட்களை சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் நிர்வாகத்தினர் மறியலில் வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், ஆதிசிவன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை தொடர அனுமதிக்க வேண்டும் என்று ஆலய நிர்வாகம் தொடர்ந்த வழக்கில் ஆலயத்துக்கு சாதகமாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தீர்ப்பு கிட்டியிருந்தது. தொடர்ந்து பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆலய நிர்வாகம் தயாராகி வருகிறது.

இதனிடையே, ஆதிசிவன் ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு பல இலங்கை - இந்தியா உள்ளிட்ட இந்து அமைப்புகளும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். அத்துடன், ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றுள்ளன. (ஐ)

# திருக்குறள் கூறிய சிறுவனுக்கு ஈழத்து ஞானக்குழந்தை விருது




யாழ்ப்பாணம், மார்ச் 27

ஐந்து வயதில் திருக்குறள்களைக் கூறி அதற்கு விளக்கமும் கொடுத்த சிறுவனான சுதர்சன் அருணனுக்கு ருத்ரசேனை அமைப்பு "ஈழத்து ஞானக் குழந்தை" என்று சிறப்பு விருது அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கொஸ்தாபிள் சுதர்சனின் புதல்வருக்கே நேற்றைய தினம் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழாவில் இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் சிறுவன் அருணன் "திருவள்ளுவரின் ஆதங்கம்" எனும் தலைப்பில் திருக்குறள் மற்றும் அதன் விளக்கம் என்பன எடுத்துரைத்தார்.

தொடர்ச்சியாக சிறுவன் இந்து சமய விழுமியங்களை நிலைநிறுத்தி பல்வேறு சமய சார் சொற்பொழிவுகளை மேற்கொண்டு அனைவராலும் பாராட்டுகளை பெற்று வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்கள் பிரதிநிதிகள் சபைகளின் செயல்பாடுகளுக்கு அச்சுறுத்தல்!

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள்

கொழும்பு, மார்ச் 27

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான பல குழுக்களை நியமித்து, ஜனநாயக - மக்கள் பிரதிநிதித்துவ சபைகளை நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் கொண்டு செல்லும் நிலைமை காணப்படுகிறது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த நடவடிக்கை மூலம் மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் கூறியுள்ளது.

இதேவேளை, தற்போது அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பிரதமர் தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க நேற்று முன்தினம் நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

நாவலர் மண்டப வளாகத்திலிருந்து

# தொல்பொருள் துறையினரையும் வெளியேறுமாறு ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 27

நல்லூர் நாவலர் மணி மண்டப வளாகத்தில் இருக்கும் தொல்பொருள் திணைக்களத்தினரையும் வெளியேறுமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

நல்லூர் நாவலர் மணி மண்டபம் அமைந் துள்ள காணி இந்து கலாச்சார திணைக்களத்துக்கு சொந்தமானது. எனவே, அவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.தற்போது நாவலர் மண்டபத்தை பராமரித்து வரும் யாழ்ப்பாணம் மாநகர சபையை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்பு கையளிக்குமாறு வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையிலேயே தொல்பொருள் திணைக்களத்தையும் வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அங்கிருந்து வெளியேறும் தொல்பொருள்திணைக்களத்தினர் தொல்பொருட்களை பிறிதோர் இடத்தை தேர்வு செய்து காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கூறப்பட்டுள்ளது.

### அரச...

மாத்திரம் சம்பளமாக 33 ஆயிரத்து 940 கோடி ரூபாய் செலவிடப்படுவதாக தெரியவந்துள்ளது.

நாட்டில், சுமார் 16 இலட்சம் அரச உத்தி யோ கத்தர்கள் உள்ளனர். இவர்களில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமானோர் (நான்கில் ஒரு பங்கு) முப்படையினர், பொலிஸார் ஆவர்.

இதேவேளை, சுகாதார அமைச்சுக்கு அடுத்த அதிகளவான தொகை சம்பளத்துக்குசெலவிடப்படுகிறது. அந்தத் தொகை 11 ஆயிரத்து 800 கோடி ரூபாய். இதன் பின்னர் கல்வி அமைச்சுக்கு 5 ஆயிரத்து 930 கோடி ரூபாயும் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 4 ஆயிரத்து 274 கோடி ரூபாயும் செலவிடப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### சிவனாலயம்...

இந்துக் கல்லூரி மைதானம் அருகே ஒன்றுகூடியவர்கள் இந் தப் போராட்டத்தை முன் னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், "வெடுக்கு நாறி எங்கள் சொத்து", "வெடுக்கு நாறியில் உடைத்த ஆதிலிங்கத்தை மீள பிரதிஷ்டை செய்", "வெடுக்குநாறி ஆதி லிங்கம் உடைக்கப்பட்டமையை கண்டிக்கிறோம்", என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அமைச்சு பதவிகள் தாமதமானால் அரசுக்கான ஆதரவு பரிசீலனை!

## பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முடிவு

கொழும்பு, மார்ச் 27

நீண்ட காலமாக அமைச்சுப் பதவிகளுக்காகக் காத்திருக்கும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழு தொடர்பில் தகவல் வெளியாகி உள்ளது. இவர்களுக்கான அமைச்சு பதவிகள் தாமதமானால், அரசுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் முடிவெடுப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன வின் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதியின் நியமனத்தின் பின்னர் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் பல தடவைகள் நியமிக்கப்பட்டும் இதுவரையில் எந்த அமைச்சுப் பதவியும் வழங்கப்படவில்லை என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழு கவலை தெரிவிக்கின்றனர். பொதுஜன பெரமுன தரப்பும் அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களின் பெயர்களை குறிப்பிட்டு சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்ததாக முன்னரே செய்திகள் வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் தொடரும்

கொழும்பு, மார்ச் 27

வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடு தொடரும் என்றும் அவற்றை இறக்குமதி செய்ய அனுமதித்தால் அந்நியச் செலாவணி கையிருப்புகளில் இருந்து பெருமளவான அமெரிக்க டொலர்கள் வெளியேறும் என்றும் திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வாகன இறக்குமதிக்கான கட்டுபாடுகள் ஒரு வருடத்துக்கு நீக்கப்படலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையிலேயே, நாணய மாற்று விகிதங்கள், அந்நிய செலாவணி கையிருப்பு அல்லது பணவீக்கத்தை எதிர்மறையாக பாதிக்கவில்லை என்றால் மட்டுமே பொருட்கள் மீதான கட்டுப்பாடுகள் நீங்கும் என்று அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (ஐ)

# ஊடகப் படைப்பாக்க போட்டி; யாழ். பல்கலைக்கு முதலிடம்!



யாழ்ப்பாணம், மார்ச் 27

அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழகங்களிடையே நடைபெற்ற ஊடகப் படைப்பாக்க போட்டிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை முதலாம் இடத்தைக் பெற்றுள்ளது.

எட்டுப் பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில், 40 இடங்களில் 25 இடங்களை யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள்துறை வென்று சாதனை படைத்துள்ளது.

ஹெல்வெற்றாஸ் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் அனுசரணையில், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தின் உதவியுடன் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் பேராதனைப் பல்கலைக்கழகம், சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்பன பங்குபற்றியிருந்தன.

துறைசார் நிபுணர்களாலும், ஊடகத் தொழில் வாண்மையாளர்களாலும் சுமார் ஒரு வருடமாகத் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட செயலமர்வுகள், பயிற்சிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து, நான்கு பல்கலைக்கழகங்களிடையே இப்போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன.

பல்லூடகக் கட்டுரைகள், வலைப்பூக்கள், மொபைல் புகைப்படங்கள், டிஜிற்றல் கமெரா புகைப்படங்கள், கருத்துப் படங்கள் மற்றும் டூடுள் சித்திரங்கள், கைபேசி காணொலி கதை சொல்லல், குறும் படங்கள், டிஜிற்றல் நாடகங்கள் ஆகிய எட்டு பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் தலா 5 போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களையும், 6 போட்டிகளில் மூன்றாம் இடங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் வெற்றி கொண்டனர்.

ஒவ்வொரு பிரிவிலும் 5 இடங்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளில் டிஜிற்றல் கமெரா புகைப்படங்கள், கருத்துப் படங்கள் மற்றும் டூடுள் சித்திரங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் அனைத்து இடங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களே கைப்பற்றிக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வுகளில் நேரடியாகப் பங்குபற்றிய மாணவர்கள், தாம் பெற்ற விருதுகளுடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவைச் சந்தித்து வாழ்த்துக்களை பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில், கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்தனன், விரிவுரையாளர்கள் தினேஷ் கொடுதோர், அனுதர்ஷி கபிலன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# எடை குறைந்த சிறுவர்களின் தொகை 15.3 வீதமாக உயர்வு!

## யுனிசெவ் அமைப்பு அறிக்கை

கொழும்பு, மார்ச் 27

இலங்கையில் கடந்த 2021ஆம் ஆண்டில் 12.2 சதவீதமாக காணப்பட்ட எடை குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த 2022ஆம் ஆண்டு 15.3சதவீதமாக அதிகரித்திருப்பதாக யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேபோன்று தமது பிள்ளைகளுக்கு அவசியமான உணவை வழங்குவதில் பெருமளவான குடும்பங்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளன. பொதுப் போக்குவரத்து சேவை குறைபாட்டின் விளைவாக சிறுவர்களால் பாடசாலைகளுக்கு செல்லமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் “சிறுவர் தொழிலாளர்“ எண்ணிக்கை அதிகரிப்புக்கு வழிவகுப்பதுடன், சிறுவர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது என்றும் யுனிசெவ் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டுக்கான தெற்காசிய நாடுகளின் பொருளாதார மற்றும் மனிதாபிமான நிலைவரம் தொடர்பான அறிக்கையிலேயே யுனிசெவ் அமைப்பு மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் நிலவரம் குறித்து அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையில் கடந்த 2022 ஜூலை 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 6 இலட்சத்து 64 ஆயிரத்து 704 கோவிட் 19 வைரஸ் தொற்றாளர்கள் பதிவாகியிருந்தனர். 16 ஆயிரத்து 535 கோவிட் மரணங்களும் சம்பவித்திருந்தன. இதேபோன்று 14.5 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் முதலாம், இரண்டாம் கட்டத் தடுப்பூசியை பெற்றுக்கொண்டதுடன், 8 மில்லியன் மக்கள் மூன்றாம் கட்டத் தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து இலங்கையில் கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி பூதாகரமான பிரச்னையாக மாறத் தொடங்கியது. அத்துடன், அது நாடளாவிய ரீதியில் சிறுவர்கள் மீதும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக, 2021ஆம் ஆண்டில் 12.2 சதவீதமாகக் காணப்பட்ட எடை குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 15.3 சதவீதமாக அதிகரித்தது. தமது பிள்ளைகளுக்கு அவசியமான உணவை வழங்குவதில் பெருமளவான குடும்பங்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்ததுடன், பொதுப் போக்குவரத்து சேவை குறைபாட்டின் விளைவாக சிறுவர்களால் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையேற்பட்டது.

அதுமாத்திரமன்றி, கடதாசிக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணமாக பரீட்சைகள் கல்வி அமைச்சினால் பிற்போடப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகள் சிறுவர்கள் “சிறுவர் தொழிலாளராக”மாறுவதற்கு வழிகோலியதுடன், அவர்களின் பாதுகாப்பையும் கேள்விக் குட்படுத்தியது.

இவ்வாறானதொரு பின்னணியில் பொருளாதார நெருக்கடியின் விளைவாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு கைகொடுக்கும் நோக்கில் சுகாதாரம், போசணை, சிறுவர் பாதுகாப்பு, கல்வி, சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகள் சார்ந்து உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்கென எம்மால் பல்வேறு செயல் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

கடந்த 2022ஆம் ஆண்டு 750,000 சிறுவர்கள் உள்ளடங்கலாக 1.3 மில்லியன் மக்களுக்கு அவசியமான மனிதாபிமான உதவிகள் யுனிசெவ் அமைப்பினால் வழங்கப்பட்டன.

யுனிசெவ் அமைப்பின் தலையீட்டின் ஊடாக நகர்ப்புறங்களில் வசிக்கும் சுமார் 8 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தூய குடிநீர் வசதியை பெற்றிருப்பதுடன், பின்தங்கிய மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் 2 இலட்சத்து 85 ஆயிரத்து 403 சிறுவர்களின் கல்விச் செயல்பாடுகளுக்கு அவசியமான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோன்று பாடசாலை மற்றும் சமூக மட்டத்தில் வழங்கப்பட்ட உளவியல் ஆலோசனை சேவையின் ஊடாக 2 இலட்சத்து 5 ஆயிரம் பேரும், கடந்த ஆண்டு கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த தாய்மாருக்கு 3 மாத காலத்துக்கு வழங்கப்பட்ட நிதியுதவி மூலம் 3010 பேர் பயனடைந்துள்ளனர். இவ் வாண்டில் அந்த நிதியுதவி மேலும் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் தாய்மாரை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியினால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள 1.7 மில்லியன் சிறுவர்கள் உள்ளடங்கலாக 2.8 மில்லியன் பேருக்கு அவசியமான உயிர் காக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கென 25 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்க முன்வருமாறு கடந்த ஆண்டு யுனிசெவ் அமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. இருப்பினும், யுனிசெவ் அமைப்புக்கு 34 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.